சுதேசமித்திரன்

18—5—47

விலை 4 அணு

The Swadesamitran ILLUSTRATED WEEKLY



குழந்தைப்பருவத்தில்

முக்கியமான சுகத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

குழந்தைக்கு

ஆரோக்யத்தைத் தரும்.

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

க்ரைப் வாட்டர் இப்பொழுது மருந்து சாமான்கள் கட்டுப்பாடு அறிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. உபயோகிப்பவரின் விலை பாட்டில் விலை ரூ. 2—2—0.

முற்றிலும் தேசிய ஸ்தாபனம்

சௌத் இந்தியா பயர் & ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி, (கோயமுத்தூர்) லிமிடெட்.

★

தலைமை ஆபீஸ் : கோயமுத்தூர்.

★

ஆயுள், மற்றும் நெருப்பு இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள் நடத்திவருகிறோம். கூடிய சீக்கிரத்தில் கப்பல், மோட்டார் இன்ஷ்யூரன்ஸ் திட்டங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

★

விவரங்களுக்கு தலைமை ஆபீஸுக்கு எழுதவும்.

"ஆஷா" அழகு உபகரணங்கள்

பவுடர், ஸ்நோ, ஹேர் ஆயில், அகர்வத்தி.

வாழ்க்கையில் இன்பம் எப்போதும் இருக்க

ஆனந்த குசுமாகர லேகியம் (Registered)

சாப்பிடுங்கள்

தாது விருத்தி, இரத்த சுத்தி, ஜீரணசக்தி முதலியவைகளை ஏககாலத்தில் கொடுக்கக்கூடியது
தேகத்தின் உஷ்ண நோய்களுக்கு அற்புத பலனை அளிக்கக்கூடிய ஓர் உயர்ந்த ஔஷதம்

விலை ரூ. 2—8—0 விவரமான காட்லாக் இனாம்.

மலையாள மெடிகல் ஹால் (REGD)

189, வக்கீல் புது தெரு, — Post Box 27 — மதுரை.

டெலிபோன் 2246 தந்தி: கிளாவர்; பீடி

லேட் கான்சாஹிப் M. முஹம்மது உமர்சாஹிபுவின் குமாரரான முஹம்மத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும் உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார் காலத்திலிருந்ததைப் போன்றே சிறப்பாக விளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்
ஸ்பேட் கிளாவர் & ஆர்மன் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

புதிய சாஸ்திரிக முறை

உங்களுக்கு இளமையின் தெம்பும் ஜீவசக்தியும் குன்றியுள்ளதா? உடனே டாக்டர் ஏ. ஜி. வால் அவர்களிடம் ஆலோசனை பெறுங்கள். ஆண், பெண் இரு பாலரின் தீராத நோய்களையும் எளிதில் தீர்க்கும் நிபுணர். அவரது விடாமுயற்சியுடன் கூடிய ஆராய்ச்சியின் பயனை அனுசரித்து வரும் "புதிய சாஸ்திரிக முறை" உங்களைப் புதிய மனிதராக்கும். உடனே கீழ்க்கண்ட விலாசத்தில் அவரிடம் ஆலோசனை பெறுங்கள். பம்பாய் ஆஸ்பத்திரி, 1/71, பிராட்வே, ஜி. டி. மதராஸ். ஆலோசனை நேரம்:— காலை 9-மணிமுதல் பகல் 12-மணி வரை. மாலை 4-மணி முதல் 7-மணி வரை. ஞாயிறு காலை 9-முதல் 12-மணிவரை மட்டும். பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

மாதவிடாய் நின்று விட்டதா? கவலை வேண்டாம்.

சாஸ்திரிக முறை தவறிய அபாயகரமான மருந்துகளை உபயோகிக்காதீர். புகழ்பெற்ற கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர்ட் ராஜ நியமோனி ஒரே தினத்தில் போக்களிக்கும். தீங்கற்றது. கடுமையானதற்கும் சிறந்த ஔஷதம். விலை ரூ. 3-8-0. ஸ்பெஷல் ராஜ நியமோனி நாள்பட்ட கேஸ்களுக்கு மட்டும் விலை ரூ. 10. உத்தரவாதம்பெற்றது. தபால் செலவு அணா 12. ரோகுகி கர்ப்பத்தடைக்கு சிறந்த தீங்கற்ற மருந்து. மாதவிடாய் ஒழுங்காயிருக்கும். நிரந்தரம் ரூ. 5 தாற்காலிகம் ரூ. 2-8-0. தபால் செலவு அணா 12.

Kaviraj. M. BHATTACHARYA (S. W.)
Kavya Vyakarantirta, Vishagacharya,
120/1/1. UPPER CIRCULAR ROAD, CALCUTTA 9.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd.)

குழந்தைகளின் சுரம், குக்கல், ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள்.

Dr பின்னா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை:—
15, புகழ்பெற்ற பிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு.

வாசனை எண்ணெய்கள் நீங்களே தயாரித்து பணத்தை மீதி செய்யலாம்.

கீழ்க்கண்ட ஏதாவது ஒரு ரக மோஹினி எஸன்ஸை 16 அவுன்ஸ் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் அல்லது விளக்கெண்ணெய். கடலை எண்ணெயில் கலந்தால் உங்களுக்குச் சிறந்த வாசனை எண்ணெயாகும். விலைகளோ மிகவும் குறைவு.

சுத்தமான மோஹினி எஸன்ஸுகளின் பெயர்களும் விலைகளும்:

சாம்பாக்	ரூ. 2-0	சந்தனம்	ரூ. 1-8	ஜாதி	ரூ. 1-8	மோகதியா	ரூ. 1-0
காஷ்	,, 2-0	மல்லிகை	,, 1-8	வில்லி	,, 1-0	ஸ்வீட்	,, 1-0
கேவ்டா	,, 2-0	ரோஸ்	,, 1-8	தாமரை	,, 1-0	மோதியா	,, 1-0
மலக்	,, 2-0	போகுல்	,, 1-8	கோலோன்	,, 1-0	இடியல்	,, 1-0

அரை அவுன்ஸ் பாட்டில்களாகக் கிடைக்கும். பாக்கிங், தபால் சார்ஜ். வி. பி. செலவு வேறு இலவசமாக காட்லாக் அனுப்பப்படும்.

S. PAUL & Co., Perfumers, (Dept. S.W.)
4, Hospital Street, Dharamtola, Calcutta.

REWARD RS. 100

GUPTA VASHIKARAN YANTRA.
(GOVT. REGD)

இது சித்த வசிகரண யந்திரம். இதை அணிவதால், எந்தக் கஷ்டமான காரியத்திலும் சரி, நீங்கள் வெற்றி பெறுவீர். நீங்கள் விரும்பும் பெண், எத்தனை கடின ஹிருதயம் படைத்தவளாயினும் உம்மிடம் வந்துசேர்வாள். இது உமக்கு அதிர்ஷ்டத்தைத் தரும். வழக்கு, செல்வம், லாட்டரி, பரீக்ஷை முதலியவற்றில் அந்த யந்திரத்தின் மூலம் வெற்றி கிடைக்கும்.

செம்பு விலை	ரூ.	2.
வெள்ளி ,,	ரூ.	3.
தங்கம் ,,	ரூ.	10.

★

SREE
KASHIVISHWANATH ASHRAM,
No. 14/A, P. O. Katrisarai. (Gaya)

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ 57

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் — அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

சோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

தமிழ் நாடு வெளியீடு - 33, பிராட்வே, சென்னை.

★

முத்தையா பாகவதர் சரிதம் (வித்வான் H. வைத்தியநாதன்)	0-12-0
பாபா காந்தி ... (ஹரிஹர சர்மா)	1-4-0
மகாதேவ தேசாய் ... (ஹரிஹர சர்மா)	1-8-0
செலிமா பேகம் அல்லது மொகல் மன்னரின் அந்தப்புரம் (டி. எஸ். குப்புசாமி)	1-8-0

இண்டோ பாம்
நோவுகளுக்கு
சிறந்த அவுஷதம்



ரவிசந்திரா மார்க்
மீனம்பாளையம்
குலன்று புகையிலை.
ஏஜெண்டுகளில்லாத ஊர்களுக்கு ஏஜெண்டுகள் தேவை
காரம், குணம், மணம் பொருந்திய
புகையிலையை உபயோகியுங்கள்.
P. R. நடராஜ கவுண்டர்
புகையிலை வியாபாரம் கோபிசெட்டிபாளையம்

ஜுரத்திற்கு
கர்னிக்
எகுமிக்சர்
உபயோகியுங்கள்

KARNIK BROS, BOMBAY 4

குஷ்ட நிவாரணி

ஏபிளைக்கும் பலனுக்கும்
உத்தரவாதமுள்ளது.

குஷ்டம் 18வகையும் செம்மேகப்பத்து, வெண்மேகம், கருமேகம், தடிப்பு அரிப்பு மதமதப்பு, விஷக்கடிகள், குழிப் புண்கள் எல்லாம் 6-வேளையில் தீருகிறது
50 வேளை செட் ரு. 10-0-0
வைத்திய பதி
R. M. நாராயணசாமி பிள்ளை,
தன்வந்தரி வைத்தியசாலை பழனி S. I

நற்சாக்ஷி

மகா-ா-ஸ்ரீ வைத்திய அய்யா அவர்களுக்கு நமஸ்காரம் செய்து எழுதியது
எனக்குப் புடையன் பாம்பு வாலரால் குத்தி பார்த்துச் சகிக்கமுடியாதபடி 6,7 வருஷமாக சரீரம் பூராவும் செம்மேகப் பத்துகளும், வழுவழுப்பாகக் கருமேகப் பத்துகளும் ½,¾ அங்குலகனத்தில் தடிப்புகளும் இருந்தன. எவ்வளவோ மருந்துகள் சாப்பிட்டும் ஊசிகள்போட்டும் குணமாகாமல் மனவேதனைப் பட்டு தங்கள் வசம் வந்து தங்கள் மருந்தையும் சாப்பிடலாம் என அபிப்பிராயப்பட்டு வந்து தங்களின் மருந்து ½ மண்டலம் சாப்பிட, சூரியனைக் கண்ட பனிபோல் எனது நோய் பூராவும் தீர்ந்து சுகமாகிவிட்டது. இதற்குமேல் மருந்தில்லை என உண்மையாகவும் உறுதியாகவும் சொல்லுகிறேன்.

(ஒப்பம்) பெருமாள் சேர்வை.
தணிச்சயம், கொண்டயாம்பட்டி போஸ்ட்
சோளவளந்தான் மார்க்கம்.

ஸ்தாபிதம் 1924.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரு. 5. ஷெ பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரு. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரு. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதுப் நேரம் மீதனை "விவாகப் பொருத்தங்கள்" புத்தகம் விலை ரு. 1. "வாழ்க்கையில் வெற்றி" என்னும் புத்தகம் விலை அணா 6. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"சந்திரிகை" எல்டாம்ஸ் ரோட், தேனாம்பேட்டை போஸ்டு, மதராஸ்.

SCIENTIFIC TT ASAFOETIDA

தொல்லை ஒழிந்தது!

தற்காலத்தில் காபி கிளப்புகளிலும், வீடுகளிலும் மக்காச் சோளம் உபயோகிக்கும்படி நேரிட்டிருக்கிறது. அரிசி உணவையே உட்கொண்டு, பழகப்பட்ட தென்னிந்திய மக்கள் இதனால் அவதி அடைகின்றனர். அஜீரணத்தைப் போக்கி, இரத்த விருத்தி உண்டாக்கி தேகத்தைக் காப்பாற்றுவது எமது

ஸைண்டிபிக் T. T. பெருங்காயம்

ஒன்றே. அழகிய பான்ஸி டின்களில் எங்கும் கிடைக்கும்.

★

ரஜீட் ஷாம்செட் சன்ஸ் & கோ.,
96, பாலெஸ் ரோடு, மதுரை.
கும்பகோணம். — மதராஸ்.

கணேஷ் காப்பிக்கொட்டை

சுவை, நறுமணமுள்ளவை

கணேஷ் அண் கம்பெனி
பாண்டி பஜார், தி. நகர்.
பிராஞ்சு: சைனாபஜார், மதராஸ்.

ஜம்மியின்
லிவர்க்யூர்

2 தனி மருந்துகள்.
வியாதி அதிகம் முற்றுமலிருக்கும் சாதாரண ஸ்திதியில் உபயோகிக்க.
வியாதி மிகவும் பலப்பட்டு அபாயகரமாயிருக்கும் சிக்கலான ஸ்திதியில் உபயோகிக்க.

நீங்கள் வாழ்வதற்கு இழந்த சக்தியை புதுப்பிக்கவேண்டும். அழகும் வனப்பும்பெற உட்புற சுத்தம் அவசியம். பைல்பீன்ஸ் செய்வது இது தான். உங்கள் அவயவங்களைப் பண்படுத்தி ரத்தத்தைச் சுத்திசெய்து கழிவடைப் பொருளை அகற்றுகின்றது. இந்த சுத்தமான தாவர டானிக் நிவாரணி உங்கள் கண்களுக்குப் பிரகாச அளித்து ஆரோக்யமும், அழகும் வசீகரமும் பெறச் செய்யும்.

இரவு படுக்கும்போது

BILE BEANS

சாப்பிடுங்கள்



கூந்தலின்

அழகுக்கு

கேஸ்ரைன் தைலத்தையும்
ஷாம்பூவும் எப்போதும்
உபயோகியுங்கள்

ஒவ்வொன்றும் விலை அணா 12.
இரண்டும் வி. பி. மூலம் ரு. 2-2-0

விக்டோரியா டிபோ,
மயிலாப்பூர், மதராஸ் 4.



Rgd. No. 2221.

27 வருஷமாய் தென்னாடு
முழுவதும் பிரசித்தி
பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம். S.I.R.

கைத்தறி
கலர் புடைவைகள்
வேஷ்டிகள்,
அங்கவஸ்திரங்கள்
80நெ. 100நெ. நூலில்
தயாரிப்பவர்கள்



S. M. S. R.
பாலசுந்தரம் செட்டி
உறையூர், P. O. திருச்சி.

சாஸ்வதமான யௌவனத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கி, புதிய இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், இல்லற இன்பத்தில் நீண்ட போக சக்தியையும் தரும். 40-நாள் மருந்து ரூபாய் 3-12-0 வி.பி. செலவு வேறு.

ஜமதக்னி ஔஷதாலயா,
26, வடக்கு மாடவீதி
மயிலாப்பூர் :: சென்னை.

ஜோதிஷ வித்வான்
V. S. சேஷாத்ரியாச்சாரியார்
45, பரோடா தெரு, தியாகராயநகர், சென்னை 17.

ஒரு ஜாதகம் விரைவாகப் பார்க்க.......................ரூ. 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு...ரூ. 1.
மேல் கேள்வி ஒன்றுக்கு.......................................அணு 8.
ஜாதகத்துக்கு ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ. 5.
ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
ஒரு ஜாதகம் கணிக்க...ரூ. 3.
பிறந்த ஊர், தேதி மணி தேவை. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

நிவாரணத்திற்கு உத்தரவாதம்

ரூ. 1000 இனாம்

எங்களுடைய

"லெப்பர் க்யூர்"

18—வித குஷ்டங்களையும், வெண் குஷ்டம், வெட்டை, வெள்ளை முதலிய வியாதிகளையும் குணப்படுத்தாது என்று நிரூபிப்பவர்களுக்கு :
இலவச காட்லாக், (24 பாஷைகளில்)

தலைமை ஆபீஸ் : வால்டேர், ஆர். எஸ்.	லக்ஷ்மி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.

ஸ்திரீகளின் வியாதிகளுக்கு கேசரியை உபயோகியுங்கள்.

**விவாக காலங்களுக்கும்
உல்லாசமாக உடுப்பதற்கும்
பரிசளிப்பிற்கும் ஏற்ற
உயர்ந்த ரக அசல் கொள்ளேகாலம் பட்டுச் சேலைகள்
எம்மிடம் கிடைக்கும். உங்கள் தேவைக்கு ஒருமுறை
விஜயம் செய்யுங்கள்.**

R. S. E.

ராதா ஸில்க் எம்போரியம்

(பட்டு ஜவுளி வியாபாரம்)
நெ. 1/14, ஸன்னதி தெரு, மயிலாப்பூர் சென்னை.
[போன் நெ. 84188]

பிராஞ்ச்: பெரிய தெரு, கும்பகோணம்.
தற்கால நிலவரப்படி விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

நோய்களை எதிர்க்க விஞ்ஞானம் புதிய கீடநாசினிகள் விருத்தியாக்குகிறது.

பொதுஜன ஆரோக்கிய பாதுகாப்பாளர்கள் என்கிற ஹோதாவில், கீட நாசினிகள் மானிட ஜாதிக்கோர் அரிய வரப்பிரசாதமாகவேயிருந்து வந்துள்ளன. இவற்றின் கண்டு பிடித்தத்திற்கு முன்னே கீடங்கள், டைபாய்ட், மலேரியா, வயிற்றுக் கடுப்பு முதலிய பயங்கர நோய்களைப் பரப்பி, உலகில் பெருத்த உயிர்ச்சேதம் விளைவித்தன. விஞ்ஞானம் இப்பொழுது ஈ, கொசு, மூட்டை முதலிய அபாயகரமான நோய்ப் பரப்பிகளை யொழிக்கும் கீட நாசினிகள் விருத்தியாக்கியுள்ளது. அவற்றில் மிகவும் நவீனமான DDT என்பது. நீர் தூவிகள் (Sprays) பௌடர்கள் நிரந்தரமாக உபயோகித்து கீடங்களைக் கொல்லும் முந்திய முறையினின்று முற்றிலும் மாறுபட்டதெனவே கூறவேண்டும். உண்மையில் கீட நிர்மூல நாசமென்பது முன்னெல்லாம் இந்த கீட நாசினிகளை அடிக்கடி உபயோகிப்பதையே நம்பியிருந்தது.

பழைய கீட நீர்தூவிகள் (Insect Sprays), பௌடர்கள் போலல்லாது, DDTயின் நாச வன்மை அதைப் பிரயோகித்த பின்னர் நெடுநாள் கெடாது நிலைத்திருக்கிறது. அதைத் திறமையுடன் உபயோகிக்குமுறைகளிலொன்று, ஒரு 5% DDT எண்ணெய் ஸொலூஷனை சுவர்கள், கூரைகள், ஸ்கிரீன்கள் முதலிய புறங்கள் மீது தூவுவதுதான். இப்படி தூவினதும், எண்ணை ஆவியாக எழுந்துபோகவும், ஓர் மெல்லிய நாசகர படலமும் புறமீது மீந்து நிற்கவும் செய்கிறது. கீடங்கள் இப்படலத்தை ஸ்பரிசித்த மாத்திரையில், அவைகள் மெதுவாகச் சுவாதீனையற்று, முடிவில் மடிகின்றன. மற்ற கீட நாசினிகளைப் போலன்றி DDT யின் விசேஷ குணமென்னவென்றால், ஒரு 5% DDT எண்ணெய் ஸொலூஷன் தூவப்பட்ட புறங்கள் வாரக்கணக்காக—ஏன், மாதக்கணக்கு கூட—கீடங்களுக்கு நாசகரமாகவேயிருக்கிறது. எனினும் DDT தாமதித்தே வேலை செய்கிறது. உடனடி சாக அடிக்கும் வன்மை அதற்கு அவ்வளவாகக் கிடையா. அதி தீவிரமான கீட நாசினி வேண்டும் போது, பிரித்ரம் தூவிகள் (Sprays) மேலானவை. பிரித்ரம் எனப்படுவது கெனியாவில் வளரும் ஒரு செடியினின்றும் கிடைப்பது. DDTயைப் போலல்லாமல், பிரித்ரம் நீர் தூவிகள் கீடங்களை உடனேயே அழிக்கின்றன. அவற்றைக் கடந்து செல்லும் கீடங்கள் உடனேயே சுவாதீனையற்று, கீழே விழுந்து சாகின்றன. ஆனால் பிரித்ரம் கீடநாசினிகளுக்கு நிலுவை குணம் கிடையாது. பிரித்ரத்தோடு கூட செயற்கை கலவைப் பொருட்கள் கலந்து, உடனடி சாக அடிக்கும் கீடநாசினிகள் இப்பொழுது தயாரிக்கப்பட்டுள்ளன. இவைகள் யுத்தத்திற்கு முந்தியிருந்த பிரித்ரம் நீர்தூவிகளை விட எத்தனையோ மேலானவை.

நீடித்த பயனுக்கு புறங்கள் மீது DDT தூவுக. சடிதி சாக அடிக்க, பிரித்ரம் வாயு விளுள் தூவுக. வீட்டில் கீடங்களை நிர்மூல நாசம் செய்ய இவ்விரண்டையும் சேர்ந்தாற்போல் உபயோகிப்பதே மேலென கீட சாஸ்திர நிபுணர்கள் கூறுகின்றனர்.

இவ்விரண்டு கீடநாசினிகளையும் உபயோகித்து, கீடாபாயத்தைத் தவிருங்கள்!

ப்ளிட் ஸர்பேஸ் ஸ்ப்ரே (FLIT Surface Spray) நிச்சயமாகக் கிடைக்க, அணியாகச் செல்லும் போர்வீரர்களோடு கூடின பச்சை டப்பா கேளுங்கள்.

ப்ளிட் வாங்கும்போது மஞ்சள் டப்பாமீது போர்வீரன் இருக்கிறானா வென கவனியுங்கள்.

பிரித்ரம் செயற்கை கலவைப் பொருட்கள் அடங்கியது

**சடிதி சாக அடிக்கும் வன்மைக்கு
ப்ளிட்டை
நம்புங்கள்**

**நீடித்த பாதுகாப்புக்கு
ப்ளிட்
ஸர்பேஸ் ஸ்ப்ரே
உபயோகியுங்கள்**

CF-1TM

வாசகர்களுக்கு ஒரு நற்செய்தி

★

ஜோதி நிலைய வெளியீடுகள் பூராவுக்கும் பூரண விநியோக உரிமையை நாங்கள் பெற்றிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.

ஜோதி வெளியீடுகள்

	ரூ.	அ		ரூ.	அ
ஹேமாங்கினி (சரத்சந்திரர்)	0	12	**செவிலித்தாய்**	0	12
ஸந்தியா ,,	1	8	*இத்தாலியக்கதை*		
ஞானதா ..	1	8	**நேதாஜி**	3	0
நாலு கதைகள் ,,	1	8	*எஸ். எஸ். மாரிசாமி*		
ஷி சாதா பதிப்பு ,,	1	0	*நேதாஜி சுபாஷ்சந்திர*		
காணுமலே காதல் (கதைகள்)			*போஸ் அவர்கள் வாழ்க்கை*		
கு. ப. ராஜகோபாலன்	1	8	*வரலாறு 300-பக்கம்*		
புன்னகை			*12-பக்கம் படங்கள்*		
ஹாஸ்யத் தொகுப்பு	2	8	*மூவர்ண அட்டையுடன்*		
மாப்பஸான் கதைகள்	3	8			
பிரபல பிரஞ்சு ஆசிரியர் மாப்பஸான் எழுதிய சிறந்த கதைகளின் தொகுப்பு			**இவர்கள்**	1	8
			உமாசந்திரன் எழுதிய ஹாஸ்ய நாடகத் தொகுப்பு		
தினக்குரல்	1	8			
ரா. வெங்கடாசலம் எழுதிய சிறந்த கிராமிய நாவல்			**காதற் கடிதம்**	2	0
பிரேத மனிதன்	1	0	*புரசு பாலகிருஷ்ணன் எழுதிய கதைகள்*		
பயங்கர நாவல்					

பிரதி மாதமும் பிரபல எழுத்தாளர்கள் எழுதிய புத்தகங்கள் வெளிவருகின்றன. அவைகள் அவ்வப்பொழுது வாசகர்களுக்கு தெரிவிக்கப்படும். விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

★

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

★

பாரத நாட்டின் சுதந்திர சரித்திரம்!!

முதல் பாகம் கைவசமில்லை.

இரண்டாம் பாகம் ,, ரூ. 2.

மூன்றாம் பாகம் ,, ரூ. 2.

(தபாற் செலவு அணா 10.)

முன்பணம் அனுப்பவேண்டும். V.P.P. அனுப்புவதிகிடையாது.

சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

அட்டைப் படம்

★

பிள்ளைப் பிராயத்திலேயே இயற்கையின அற்புதங்களை உணர்த்தி, ரஸானுபவத் துறையில் மனத்தைப் பண்படுத்தும் உத்தமமான காரியத்தைத் தாயார்தான் முதலில் ஏற்றுக்கொள்ளுகிறாள். தன் குழந்தைக்கு உணவு ஊட்டும்போதும், வேடிக்கை காட்டும்போதும் வானவெளியிலே காணப்படும் அற்புதமான மேக ஸஞ்சாரம், சந்திரனின் பவனி, தாரகைகளின் கூட்டம் இவற்றைக் கண்டு களிக்கக் கதைகள் சொல்லுவதும் தாயின் வேலையே. அத்தகைய காட்சியொன்றுதான் இவ்வாரம் தோன்றுகிறது.

இந்த இதழில்

★

	பக்கம்
ரத்னஹாரம்	... 11
ஸங்கேதம்	... 15
அலமுவின் கடிதங்கள்	... 18
வேண்டும் (பாட்டு)	... 22
தெய்வம் இருக்கிறதா?	... 23
மஹாபாரத ஸாரம்	... 26
குழந்தைக் கலை	... 29
சிறுவர் கதை	... 31
உக்ரோதயம்	... 35
மரண வித்தை	... 37
படங்கள், சித்திரங்கள்	

வாழிய செந்தமிழ் — சுதேசமித்திரன் — வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XVIII] ஸர்வஜித்துஸு வைகாசிமீ 4உ ★ 1947-ஸு மேமீ 18உ [No. 16

விஷமம் விலக வேண்டும்

மகாத்மா-ஜின்னா சந்திப்பு வீணாயிற்று. இதில் ஆச்சரியத்துக்கு இடமேது? லீக் தலைவரின் பிடிவாதம் பிரசித்தம். காந்திஜி மறுபடி ஏன் லீக் தலைவரைச் சந்திக்கவேண்டும்? இதனால் வீணாகக் காங்கிரஸ் பெருமை குன்றி, லீகின் கௌரவம் உயராதா? பொய் மதிப்புக்குட்[பட்ட] மகாத்மாவுக்கும் வெகு தூரம். நேர்மையான ஒரு உடன்பாடு ஏற்படுவதாயிருந்தால், யாரையும், எங்கும், எவ்வளவு முறை வேண்டுமாயினும் அவர் சந்திக்கத் தயார்.

காந்தி-ஜின்னா சம்பாஷணையில் முக்கிய விஷயம் பாகிஸ்தான் பற்றியது. இந்தியாவின் ஒருமித்த பலம் சிதறிப்போவதுடன், இதனால் லாபமடையக்கூடியவர் யாருமில்லை. பஞ்சாப், வங்காளம், ஸிந்து பிரிவினை இயக்கங்கள் வேகமாக ஆக்கம்பெற்றுவருவது பாகிஸ்தான் கோரிக்கையின் பிரதி பலன்தான்.

பலாத்கார முறைகளையும், பிரிட்டிஷ் ஆதரவையும் கொண்டு தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக்கொண்டு விடலாமென்பது லீகர்கள் நம்பிக்கை. பல இடங்களிலும் வகுப்புக் கலகம் நீடிப்பதன் மர்மம் இதுவே. லீகினர் எதிர்பார்ப்பதுபோல பிரிட்டனும் ஆதரவளிக்கிறதோ என்ற சந்தேகம் உறுதிப்பட்டு வருவதற்கான காரணங்கள் கண் கூடு. எல்லைப்புறத்[தில்] மட்டும் மறுபடி தேர்தல் நடக்க வேண்டுமென்று கேட்பதுடன் லீகர்கள் நிற்கவில்லை; மந்திரி சபைக்குப் பதிலாக கவர்னரது யதேச்சாதிகார ஆட்சியின் கீழே தேர்தல் நடக்க வேண்டுமென்றும் அவர்கள் வற்புறுத்துவது குறிப்பிடத்தக்கது. அங்குள்ள கவர்னரும், நிரந்தர அதிகாரிகள் பலரும் லீகர்களின் கையாட்களாகப் பயன்பட்டுவருவது நிதர்சனம். அவர்களுடைய ஆதரவு இல்லையாயின், லீகர் ஆர்ப்பாட்டம் முன்பே அடங்கியிருக்கும். தாங்கள் கனவு காண்பதுபோன்ற பாகிஸ்தான் உருவாக பிரிட்டனிடமிருந்து ஆதரவு தொடர்ந்து கிடைக்குமென்பது அவர்கள் நினைப்பு. இந்நிலையில் நாடு ஒன்றுபட்டிருப்பதற்கான காந்திஜியின் வாதங்கள் எவ்வாறு லீக் தலைவரின் உள்ளத்தில் உறைக்கக்கூடும்?

அந்நியரின் விஷம ஆதரவு தங்களுக்கு எந்த நிலையிலும் கிடைக்காதென்ற நிச்சயமேற்பட்டால், அடுத்தக்ஷணமே லீகர்களுக்கு உண்மை நிலைமை புலனாகும்; அதற்கொத்தவாறு விவேகமான ஒரு வழியை அவர்கள் கையாள முன்வருவரென்பதில் சந்தேகமில்லை. காந்திஜியின் அங்கீகாரத்துடன் ஜனாப் ஜின்னா வெளியிட்டுள்ள அறிக்கையில் ஏற்கனவே விடுத்த வேண்டுகோளையொட்டி சமாதானம் நிலைபெற தம்மாலானதைச்செய்வதாக கூறியிருப்பது உண்மையே. ஆனால் அவரது பழைய வேண்டுகோள் முஸ்லீம் மெஜாரிட்டியுள்ள வங்காளம், எல்லைப்புறம், பஞ்சாப் மாகாணங்களில் எவ்வளவு மதிப்பு பெற்றிருக்கிறதென்பது அறிந்த விஷயம். லீக் தலைவருக்கு ஒன்று ஆங்குள்ள முஸ்லிம்களிடையே உண்மையில் செல்வாக்கில்லை; அல்லது அவரது வேண்டுகோள் அந்தரங்க சுத்தியுடன் கூடியதல்ல என்றே முடிவு கட்டவேண்டும்.

இத்தகைய விஷமங்களுக்கெல்லாம் விசைபோலுள்ள விஷமம் விலகவேண்டும். அப்போதுதான் வழி புலப்படும். லீகினரின் அர்த்தமற்ற பிடிவாதத்துக்கும், பிடிவாதத்துக்கும் மூலகாரணம் பிரிட்டனின் நேர்மையற்ற போக்குதான். இது மேலும் வளர்ந்தால் பிரிட்டனிடமுள்ள நம்பிக்கை அடியோடு சிதறிவிடும்.

★





திருச்சியிலுள்ள க்ஷய ரோக நிவாரண ஸ்தலத்தை சென்ற வாரம் ராஜாஜி திறந்துவைத்த போது எடுத்த படம்.

☆

க்ஷயரோக நிவாரண ஸ்தலத்தை ராஜாஜி திறந்து வைக்குமுன் "ரிப்பனை" கத்தரிக்கையில் எடுத்த படம்.

ரத்னஹாரம்

'தாரா'

☆

அன்று பூரணிமை. வான வீதியில் சந்திரன் தன் அமுத கிரணங்களைப் பொழிந்து தனது ஜாலவித்தையில் மாந்தர்களை மகிழ்வித்துக் கொண்டிருந்தான்.

வீதிகளின் மேன்மாடங்களில் சர விளக்குகள் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தன. அகில், சந்தனம், மகரந்தபபொடிகளது புகையின் சுகந்தம் காற்றில் எழும்பிக் கொண்டிருந்தது.

கன்னியர்கள் ஆடல் பாடல்களில் திளைத்திருந்ததனுல் கலீர் கலீர் என்று சதங்கையின் ஒலியுடன் யாழின் இனிய நாதம் காற்றலையில் கலந்து வந்து கொண்டிருந்தது.

ஆடவரும், மகளிரும் சிறுவர் சிறுமியர்களும் பலவித கனிவகைகளையும், மலர்களையும், சுமந்து காமாட்சி தேவியின் ஆலயம் நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். அன்று விஜயபுரியின் தோற்றமே ஓர் தனி சோபையுடன் விளங்கியது.

உமாபதி கோபுர வாயிலைக் கடந்து காமாட்சி தேவியின் ஆலயச் சித்திர மண்டபத்தின் அருகில் வரும்போது கலகலவென்கிற நகையொலியுடன் கைவளைகளும் பாதச் சிலம்புகளும் ஒலிக்க, ஒருத்தி மற்றவளைப் பார்த்து, 'அடி மாலதி! நம். இளவரசி வாசந்திகைக்கு வரப்போகும் கணவர் இப்படித்தான் இருப்பாரோ!'' என்று ஒரு விகார ரூபத்தைக் காட்டவே மகளிர் யாவரும் கலீரென்று நகைத்தார்கள். அப்பொழுது வாசந்திகை கோபமும், வெட்கமும் தொனிக்கும் குரலில், "வம்புக்காரிகளா! விளையாடுவதற்கு இதுவா இடம்? வாருங்கள் போவோம் தேவியின் சன்னிதிக்கு," என்று சொல்லவே அனைவரும் கிளம்பினார்கள். அவர்கள் அவ்விடத்தைவிட்டு நீங்கியதும், எதிர்பட்ட உமாபதி அம்மகளிருள் நடு நாயகமாக விளங்கும் இளவரசியைக் கண்டான். அவன் கண்கள் ஆச்சிர்யத்தினால் ஒரு கணம் திகைப்படைந்து விட்டன. என்ன ரூப சௌந்தர்யம்! அழகின் உருவமோவென வியந்தான். அதே சமயத்தில் இளவரசியும் தற்செயலாகத் திரும்பினாள். அவளுடைய விசாலமான நயனங்கள் உமாபதியின் கவர்ச்சிகரமான முகத்தைக் கண்டு ஒருகணம் மருட்சி அடைந்தன.

●

உமாபதியின் கால்கள் அர்த்தமற்ற துடிதுடிப்புடன் அவன் இல்லம் நோக்கிச் சென்றன. அவன் உள்ளம் "ஆ...ஹா! இவ்வளவு காலம் என் வாழ்நாள் வீணாகிவிட்டனவே! இச்சுகுமாரியின் மார்பில் மிளிர்ந்து விளங்கவேண்டிய அணிகலன்களை இனி என் கைகளாலேயே செய்து அச் சுகுமாரியை மகிழ்விப்பேன்.'' என்ற சிந்தனையுடன் வீடு நோக்கிச் சென்றதும் அவன் தந்தையிடம் சென்று அவரை வணங்கி "அப்பா! கவலையை விடுங்கள். இனி அரண்மனையின் அணிகல வேலைகள் யாவும் என்னுடையவை'' என்றான்.

தேவதத்தன் உவகையுடன், "உமாபதி! இன்றே என் ஜன்மம் சாபல்யமாயிற்று. இப்பொழுதேனும் நம் குலத்தொழிலில் உனக்கு விருப்பம் வந்ததே, உன் வேலையில் வெற்றி பெற்று, என்றும் அரண்மனையின் மங்கலப் புகழை அடைய நம் தேவி காமாட்சி அருள்புரிய வேண்டும்'' என்று ஆசி கூறினான்.

தேவதத்தன் விஜயபுரி அரசன் மகேந்திரனுடைய அரண்மனையில் பரம்பரையான பொற்கொல்லன். அவன் புதல்வன் உமாபதி. இளமையிலிருந்தே தன் குலத்தொழிலை மேற்கொள்ளாது, சதா காலமும் கல்வி கற்பதும், கவிபாடுவதும், யாழிசைப்பதும், பலவூர்களுக்கு யாத்திரை சென்று வருவதுமாகவே இருந்தான். தேவதத்தனுக்கு தன் புதல்வன் தன்னுடன் அரண்மனையின் வேலையில் ஈடுபடாதது ஓர் பெருங்குறையாகவே இருந்தது. அன்று உமாபதியின் சொல்லைக் கேட்டதும் அவன் உள்ளம் அளவிலா பூரிப்பை அடைந்தது.

அன்று இரவு முழுவதும் உமாபதியின் கலை உள்ளத்திலே பல இன்பக்கற்பனைகள் முழு மதியைக் கண்ட முந்நீர்போல் பொங்கின. அதில் அவன் திளைத்திருக்கையில் தொடங்கியது ஓர் இன்பக்கனவு. அவன் நவரத்தினங்கள் இழைத்த ஓர் இரத்தின ஹாரத்தை இளவரசிக்காக இசைத்துவிட்டான். அதில் கண்களைக் கவரும் பலவித நிறங்களில் பல பல மலர்கள் அன்று அலர்ந்தது போல் மிளிர்ந்ததைப் பார்த்துப் பார்த்து பிரமித்த உமாபதி அதை எடுத்துக்கொண்டு மகிழ்ச்சியோடு நேரே உத்யாவனம் நோக்கிச்சென்றான். இளவரசி வாசந்திகையை எதிர்பட்ட அவன் பிரமையோடு "என்ன ஆச்சர்யம்! தேவி! இதை ஏற்றுக் கொள்ளுங்கள்...'' என்று அவள் கரத்தில் ஹாரத்தைக் கொடுக்க வாசந்திகை கனிவுடன் அவனை நோக்கி, "உமாபதி! நீயா இந்த ஹாரத்தை இசைத்தாய்? என்ன அற்புதம்! அற்புதம்! என்று சொல்லிக்கொண்டே,

இந்தா உனக்கு என் அன்பின் பரிசு' என்று தன் கழுத்திலணிந்துகொண்டிருந்த முத்தாரத்தை எடுத்து தானே வந்து அவன் கழுத்தில் சூட்டினாள். அவ்வளவு தான் உமாபதிக்கு ஒன்றுமே ஓடவில்லை. தனக்கு மாலை சூட்டின அந்த மிருதுவான கரத்தை எட்டிப்பிடிக்க முயன்றான். அப்பொழுதுதான் தான் கண்டது வெறுங் கனவு என்பது புலனாகியது. தன் கழுத்தில் கடக்கும் பூணூல்தான் அவன் கைக்கு தட்டுப்பட்டது! அவன் இருதயத்திலிருந்து ஓர் நெடு மூச்சு வெளிப்பட்டது. கனவில் கண்டது வெறும் பிரமையா? ஆனாலும் அவன் கைகளுக்கும் மனதிற்கும் எங்கிருந்தோ புதிய சக்தி பிறந்தது. அதன் பயனாக ஓர் இரத்தின ஹாரத்தை கற்பனைக்குமெட்டாத ஓர் புதிய சிருஷ்டியில் சோபையுடன் நிர்மாணிக்க அக்கலைஞனின் உள்ளம் துள்ளி எழுகிறது.

அன்று விஜய புரிநகரம் தேவேந்திரனின் அமராவதிபோல் விளங்கியது. எங்கும் மகா தோரணங்களும் வாழை, கமுகுடன் கூடிய பூப்பந்தல்களும் இலங்கின. மங்கள வாத்தியங்கள் முழங்க, மாந்தர்கள் அனைவரும் தங்கள் ராஜகுமாரியின் திருமண வைபவத்தைக் கண்டு களிப்பதில் ஈடுபட்டிருந்தார்கள். வீதிகளில் உயர்ந்த ஜாதி வெண் புரவிகளில் பல பல தேசங்களிலிருந்து அரசர்களும், பிரபுக்களும், வீரர்கள் வருவதும் அப்புரவிகளின் வேகத்தில் செம்புழுதிப் படலங்கள் கிளம்பி மேக மண்டலம் வரையில் சென்று படர்வதும் வியப்பைத் தந்தன.

அப்பொழுது ராஜகுமாரி வாசந்திகை உத்யான வனத்தில் பளிங்கு மேடையின் மேல் அமர்ந்து, தன்னை மணக்கப்போகும் ராஜகுமாரன் பாலசந்திரன் உருவப் படத்தை எதிரில் வைத்து நோக்கிக்கொண்டிருந்தாள். ஆனால் அவளையும் அறியாமல் அவள் உள்ளத்தில் ஓர் களளம்புகுந்து நிறைவு கொண்டது. அவள் பெருமூச்சுடன் ஹே, ஈச்வரி! இது என்ன சோதனை! என் மனதில் ஏன் அமைதி இல்லை. உன் ஆலயத்தில் அன்று கண்ட அந்த வசீகர முகம் ஏன் என் மனதில் கிளர்ச்சியை உண்டாக்கிவிட்டது. என்னை இம்மன அமைதி நிலையின்மையினின்று காப்பாற்று" என்று கண் கலங்கினாள். அப்பொழுது ஒரு தாதி ஓடோடியும் வந்து. "தேவி ரத்தின ஹாரம் செய்து வந்துள்ளது." என்றாள்.

வாசந்திகை அலக்ஷியமாக, நான் அதை இங்கேயே எடுத்து வரச் சொன்னதாகச் சொல், என்று சொன்னாள். தாதி சென்றதும், ஓர் இளைஞன் பட்டுப் போர்வையால் போர்த்துத் தந்தப் பேழையை வாசந்திகையினருகில் முன்பாக வைத்து வணங்கி நின்றான். இருவர் கண்களும் நோக்கின. வாசந்திகை அவனைக்கண்டு திடுக்கிட்டாளானாலும், பேழையைக் கண்டு அதனுள் இருந்த இரத்தின ஹாரத்தை எடுத்ததும், அவள் வியப்பு பன்மடங்கு அதிகரித்தது. அவள் அந்த இளைஞனை ஆச்சரியத்துடன் தாங்கள் யார்? இதை இசைத்தவர் தாங்கள் தானோ?

"ஆம் தேவி! நான் பொற்கொல்லன் தேவதத்தன் குமாரன் உமாபதி' என்றான் உமாபதி பணிவாக.

'உமாபதி! நீர் ஒரு தெய்விக சிருஷ்டி. என்ன அபூர்வமான வேலைப்பாடு. இந்த ஹாரத்தைப்போல் நான் எங்கும் கண்டதில்லை" என்றாள் வாசந்திகை.

"இல்லை குமாரி! எல்லாம் தங்கள் பிரேமையின் பிரதிபலிப்புத் தான் என்றான் உமாபதி கனிவான தோற்றத்தில் வாசந்திகையின் உள்ளம் நெகிழ்ந்தது. ஹாரத்தைக் கண்டத்தில் அணிந்துகொண்டாள். அவளுடைய சோபை பின்னும் பன்மடங்கு அதிகமாகியது. அவள் உள்ளம் சிலிர்த்தது. அவ்வதிர்ச்சியைத் தாங்கமுடியாத அவள் நளின இருதயம் சோர்வடைந்தது. அவள் அப்படியே மூர்ச்சையுற்றாள். உடனே தாதிகள் ஓடோடியும் வந்து ஆச்வாசப் படுத்தினார்கள்.

அவன் கால்கள் உணர்ச்சியற்று வீடு திரும்பின. உமாபதியின் உள்ளத்தில் ஏக்கத்தின் சாயை படர்ந்தது. ஆம். அவன் ஒரு கலைஞன் கவிஞன். உலக வரைக்கும் உட்படாத சிந்தனைகள், கற்பனைகள் செய்தது. அவன் கொண்ட காதல் ஒளி குன்றிற்று.

இளவரசி வாசந்திகைக்கும், இளராஜகுமாரன் பாலசந்திரனுக்கும் திருமணம் நடந்தேறியது. அதற்கு நரேந்திர சக்கரவர்த்தியும், மகாராணியும் விஜயம் செய்திருந்தார்கள். அவர்கள் தம் தேசம் போய்ச் சேர்ந்ததும், மகேந்திரனுக்கு ஒரு திருமுகம் அனுப்பினார்கள். அதில் ராஜகுமாரி வாசந்திகை அணிந்திருந்த ரத்தின ஹாரத்தைக் கண்டு அரசி விரும்புவதாகவும் உடனே அதைப்போல் ஒன்று செய்து அனுப்பும்படி உத்திரவாகியிருந்தது.

சக்கரவர்த்திக்குச்கப்பம் செலுத்தும் அரசனான மகேந்திரன் அவர் அனுப்பிய அத்திருமுகத்தை சிரமேற்கொண்டு உடனே தேவதத்தனைத் தருவித்து, நம் குமாரிக்கு இசைத்ததைப்போன்ற ஓர் இரத்தின ஹாரத்தைச் செய்து முடிக்கவேண்டும். அதற்குத் தேவையுள்ள ரத்தினங்களை நம் பொக்கிஷத்திலிருந்து பெற்றுக்கொள்ளும்' என்று கட்டளையிட்டான். தேவதத்தன் பெருமிதத்தோடு தன் புதல்வனை நோக்கி "நாம் சக்ரவர்த்தியின் ஆதரவையும் பெறப்போகிறோம். சீக்கிரமே ரத்தின ஹாரத்தின் வேலையைத் தொடங்குவாய்" என்றான். உமாபதி சில நிமிஷங்கள் சிந்தனை செய்து, "இல்லை இந்த ஜன்மத்திலில்லை! என் இருதய ராணிக்கு சமர்ப்பித்த ரத்தின ஹாரத்தை அளித்த இக்கரங்கள் இனி ஒருவருக்கும் பயன்படாது; "அப்பா இனி என்னால் ஒரு வேலையும் செய்யமுடியாது. அந்த ஹாரமே என் வாழ்வில் நிரந்தரமான முதலும். கடைசியுமான வேலை' என்றான்.

"உமாபதி! என்ன உளறுகிறாய்? அரசன் ஆணை என்பதை மறந்தனையோ?" என்றான் கோபத்துடன் தேவதத்தன்.

"இல்லை அப்பா! ஆண்டவன் ஆணையாகிலும் என்னால் முடியாது" என்றான் உறுதியுடன் உமாபதி. தேவதத்தனின் உள்ளம் நடுநடுங்கியது.

இச்செய்தி அரசன் செவிகளுக்கு எட்டியது. அவன் பற்களை நறநறவென்று கடித்து பிரளயகால ருத்திரனைப்போல், சீறி விழுந்து, "என்ன! அந்த அற்ப பொற்கொல்லனுக்கா இவ்வளவு ஆணவம்? என் கட்டளைக்கு நாளை பொழுது புலர்வதற்குள் சம்மதிக்காவிடில் அவன் கரங்களின் விரல்களை சிதைத்து விடுங்கள்." என்று கட்டளையிட்டான்.

அன்று எங்கும் காரிருள் கவிந்துகொண்டிருந்தது. ஓர் ஜீவன் காமாட்சி தேவியின் ஆலய கர்ப்பக்கிருகத்தை அடைந்து மண்டியிட்டபடியே "ஹே தேவி! என் வாழ்க்கையின் அமைதி குலைந்தது. காதல் சிதைந்தது. என் பிரேமையின் உருவம் தேய்பிறைபோலொளி குன்றியது. அவ்விரத்தின ஹாரத்தைச் செய்ய உபயோகித்த இக்கரங்களை இன்று நீ உன் கழுத்தலணிந்திருக்கும் கபால ஹாரத்தின் நடுவில் இசைத்து அணிந்துகொள்' என்று தன் இடையில் செருகியிருந்த சிற்றுணியை எடுத்தான். அது மின்வெட்டின் ஒளியில் 'பள பள' வென்று பிரகாசித்தது.

இரத்த வெறிகொண்ட காமாட்சிதேவியும் இக்கோர காட்சியைக் காணச்சகியாது, தன் சன்னிதியில் சுடர்விட்டெரியும் தீபத்தைச் சடேரென்று அணைத்துக்கொண்டாள்போலும்! அப்பயங்கரமான காற்றுடன் ஓர் தீனமான குரல் "வாசந்திகா! உன்னை இச்ஜென்மத்தில் அடையாவிட்டாலும் மறு உலகத்திலாவது அடைவேன். அங்கு உயர்வு, தாழ்வு என்ற அந்தஸ்துகளில்லை. தேவி அருள்புரிவாளாக!" என்று பொருமியது. தேவி ஆலய துவஜஸ்தம்ப மணிகள் நற்குறியாக "ஓம், ஓம். ஓம்' என்று ஒலித்தன. உமாபதியின் முகத்தில் சாந்தி படர்ந்தது மின்னல் வெட்டின் ஒளியில் தெரிந்தது. மறுபடியும் சாந்தி நிலவியது.

......,,ஒங்க சமத்தை யார்கிட்டே சொல்லிண்டு அழுவேன்? சீப்பா கிடைச்சுதுன்னு ஒதவாக்கரை அமெரிக்கன் சீப்பை ½ டஜன் வாங்கிண்டு வந்து தொலைச்சிருக்கேளே! நல்லதா இல்லையான்னு வாரி பாத்து வாங்கிண்டுவரவேண்டாமா?......"

பெரியவர்: இப்ப நான் கொடுத்திருக்கிறேனே அதேபோல் பெரிய படமா எழுதணுங்க. ஆனா அதுலே இருக்கிற தலைப்பாகையை மட்டும் எடுத்துடுங்க.

சித்திரக்காரர்: அது சரி, படத்திலே இருக்கிறவருக்கு கிராப்பா, குடுமியா?

பெரியவர்: தலைப்பாகையை எடுக்கறபோது பாத்துக்குங்களேன்.





இடைக்கால சர்க்கார் மந்திரி ராஜாஜி 8-ந்தேதி மாலை மீனம்பாக்கம் விமானக்கூடத்தில் டில்லியிலிருந்து வந்திறங்கினார். சென்னை நகர பிரமுகர்களும், மந்திரிகளும் அவரை வரவேற்றபோது எடுத்த படம்.

★

(இடது)

இந்தியாவுக்கு சீனாவின் புதிய தூதராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் லோவேனும், பண்டித நேருவும் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் எடுத்த படம்

ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் ஸாஹித்யங்கள்

'நாத்ய ஸேவா நிரத' செம்மங்குடி ஸ்ரீநிவாஸஐயர் ஸ்வரப்படுத்தியது

★

பல்லவி

கோஸலேந்த்ர மாமவாமித குண நிவாஸ பகவன் ! (கோ)
3 4 4 3

அனுபல்லவி

பாஸமான மஹாமணி மண்டப—
4
பரிவிலஸித ஸிம்ஹாஸந ராஜித (கோ)

சரணங்கள்

1. பாஹுத்ருத ஸரசாபது த-
3 4 4
பக்தஜநாகிலதாப
2
ஆஹவாஹத விமதாடோப
ஹார மகுட கேயூரகலாப (கோ)

2. ஜானகீலஸிதாங்க ஜல—
ஜாஸ்ய விநாஸிதலங்க !
பானுவம்சபயோதி சசாங்க
4
பாதவிஹத முனிதருணீ பங்க (கோ)
3 4 3

3. நீலஜலதரகாத்ர வ்ருத—
4 3
நீல நளாங்கதபுத்ர
பாலலோசனமுகநுதிபாத்ர
2 2
பவனஸுத கலிதசாரு சரித்ர (கோ)

	பல்லவி
ஹே அமிதகுண நிவாஸ 3	—அநேக நற்குணங்களுக்கு இருப்பிடமும்,
கோஸலேந்த்ர, பகவன், 3 43	—அயோத்தியாதிபதியுமான ஸ்ரீ ராமபிரானே
மாம், அவ	—என்னைக் காப்பாற்றுவாயாக.
	அனுபல்லவி
பாஸமான மஹாமணி மண்டப 4	—பிரகாசிக்கின்றதும் ரத்தினங்களிழைத்ததுமான மண்டபத்தில்,
பரிலஸித	—விளங்கும்
ஸிம்ஹாஸன ராஜித	—ஸிம்ஹாஸனத்திலமர்ந்து விளங்குபவனே,
	சரணங்கள்
	(1)
பாஹு-த்ருத சரசாப 3 4	—கையில் வில்லும் அம்பும் தரித்திருப்பவனே,
துத பக்தஜனநிலதாப 4 4 2	—பக்தர்களின் தாபங்களை யகற்றுபவனே,
ஆஹவாஹத விமதாடோப	—யுத்தத்தில் சத்ருக்களின் கர்வத்தை யழித்தவனே,
ஹார, மகுட, கேயூர, கலாப	—ஹாரம், கிரீடம், தோள்வளை முதலிய ஆபரணங்களையணிந்திருப்பவனே, (என்னைக் காப்பாற்றுவாயாக)
	(2)
ஜானகீ, லஸிதாங்க	—ஸீதாபிராட்டியால் விளங்குகின்ற மடியையுடையவனே,
ஜலஜாஸ்ய	—தாமரை மலருக்கு நிகரான முகமண்டலத்தையுடையவனே,
விநாஸிதலங்க	—லங்கா நகரத்தையழித்தவனே
பானுவம்ச, பயோதி 4 4	—சூரிய வம்சமாகின்ற பாற்கடலுக்கு
சசாங்க	—சந்திரனைப் போன்றவனே,
பாத விஹத	—தனது பாதத்தினால் அகற்றப்பட்ட
முனிதருணீபங்க 4 3	—கௌதம முனிவரின் பத்தினியான அஹல்யையின் சாபத்தை யுடையவனே (தனது பாதத்தினால் அஹல்யையின் சாபத்தை யகற்றியவனே) (என்னைக் காப்பாற்றுவாயாக)
நீலஜலதரகாத்ர 4 3	—கார்மேகத்திற்குச் சமமான சரீரத்தையுடையவனே,
வ்ருத நீல நளாருணபுத்ர	—நீலன், நளன், ஸு-க்ரீவன் முதலான வானர வீரர்களால் சுற்றப்பட்டிருப்பவனே,
பால லோசன முக 2 2	—பரமசிவன் முதலானவர்களின்
நுதிபாத்ர	—ஸ்தோத்திரத்திற்குப் பாத்திரமானவனே,
பவனஸு-த	—வாயு குமாரனான ஹனுமானால்
கலிதசாருஸு-சரித்ர	—துதிக்கப்படும் சரித்திரத்தையுடையவனே (என்னைக் காப்பாற்றுவாயாக)

ராகம் : மத்யமாவதி தாளம் : ஆதி (1-களை.)

ஆ: ஸரிமபநிஸ் அ: ஸ்நிபமரிஸ.

28—வது மேளத்தில் ஜன்யம்.

பல்லவி

1. ; * ஸா, நி ஸா ரீ ; ரி ஸ ரீ . கோ. . ஸ லே. . ந் த்ர	; ரீ ம ரி மா . மா . . ம	பா . ப ம ரி வா . மி . த	‖
2. ; * ஸா, நி ஸா ரீ ; ரி ஸ ரீ . கோ. . ஸ லே. . ந் த்ர	; ரீ மரி மா . மா . . ம	பநிஸ்நி பமரீ வா . . . மி . த	‖
3. ஸா * ரிஸ நீ ஸா ரீ ; ரி ஸ ரீ . கோ. . ஸ லே . . ந் த்ர	; ரி ம ப நி ஸ் நி . மா . . . ம .	பமரீ பமரீ வா . . மி . த	‖
4. ஸா * ரிஸ நீ ஸா ரீ ; ரி ஸ ரீ . கோ. . ஸ லே. . ந் த்ர	; ரி ம ப நி ஸ் ரி . மா . . . ம .	மரி ஸ்நி பமரீ வா. . . மி . த	‖
ஸா * நி ரீ ஸா ஸநி பா பா நிஸ ரிம . கு ண நி வா. . ஸ ப . க .	ஸ ரீ ஸ ; ; வன் . . .	; ; ; ;	‖

அநுபல்லவி

1. ; * பா : பா பா நீ பா மா . பா . ஸ மா . ன ம	பா , நி ஸ்ா நீ ஹா. . ம ணி	ஸ்ா ; ஸ்ா ஸ்ா ம ண் ட ப .	‖
2. ; * பா : பா பநி ஸ்நி பா மா பா . ஸ மா . . . ன ம	பா , நி ஸ்ா நீ ஹா. . ம ணி	ஸ்ா : ஸ்ா நிஸ் ம ண் ட ப .	‖
3. ரிம் * ரிஸ் நிப : பா பநி பநிஸ்நி பா மா . . பா. . . . ஸ மா. . . . . ன ம	பா , நி ஸ்ா நீ ஹா. . ம ணி	ஸ் ரீ ஸ் ஸ்ா ஸ்ா மண் . ட ப	‖
1. ; * நி ஸ்ா ரி ஸ்ா ஸ்நி பா பநி ஸ்ா . ப ரி வி ல ஸி . த ஸிம் .	ப நி ஸ் நி பாபம ஹா. . . ஸ ன .	ரி ம ப நி பமரீ ரா . . . ஜி . த	‖
2. ; * நி ஸ்ா ரி ஸ்ா ஸ்நி பா பநி ஸ்ா . ப ரி வி ல ஸி . த ஸிம் .	பநிஸ் ரிஸ்நி ஸ்நி ஹா. . ஸ். . ன .	ப நிபம பமரி ம . ரா . . ஜி . . த	‖
ரிஸ * . .	"கோஸலேந்த்ர மாமவ"		

சரணம்

1. ; * பா ; பம ரீ பம ரீ ஸா . ஜா . ன. கீ . . ல ஸி	ஸா , நி ஸ ரீ ஸ தா . ங் . . .	ரீ ; ப ம ரி ஸ க	‖
2. ரிம * பநி ஸ்நி பம ரிம பம ரீ ஸ ரி . . ஜா . . ன . கீ . . . ல ஸி	ரி ஸா நி நீ பா தா ங் . . .	நி ஸ ரீ ரி ஸ ரீ க . . ஜ . ல	‖
ரீ மரி மா பா பா நி நி பா பம ஜா . . ஸ்ய வி நா . . ஸி த .	மரி பம நிப பம லங்	ரீ ; ஸா ; க . . .	‖
: பானுவம்ச ப : பாத விஹத முனி	யோதிச தருணீ	சாங்க பங்க	‖ ‖ : "கோஸலேந்த்ர"

(இதை அனுபல்லவிபோல் பாடவும்.)

அன்புள்ள அம்மாவுக்கு, அலமு அநேக தண்டம் சமர்ப்பித்த விஞ்ஞாபனம்.

நேற்று பத்திரிகையில் வெளியாகியிருந்த ஒரு செய்தி எங்கள் மனதை ரொம்பவும் கலக்கிவிட்டது. ஏற்கெனவே இரண்டு வாரமாக சிரோமணியைப்பற்றிய சமாசாரம் பல வித ரூபங்களில் அடிபட்டுக்கொண்டிருக்கிறதா? அது போதாதென்று பத்திரிகைகளில் வேறு செய்திகள் வர ஆரம்பித்துவிட்டன. நேற்று காலை நானும், மன்னியும் சென்னையில் சர்க்கார் வீடு கட்டித் தரும் திட்டத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். 'இவர்', வாஸு, அண்ணா மூன்றுபேரும் வீட்டிற்கு மனுச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். அநேகமாக எங்கள் எல்லோருக்கும் ஒரே இடத்தில் வீடு அமையும்படி வாஸு பிரயத்தனப்படுவதாகச் சொல்லியிருக்கிறார். இப்படி நாங்கள் பேசிக்கொண்டிருந்த சமயத்தில், பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்த, இவர் கையில் பத்திரிகையுடன் நாங்கள் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்தார். 'அலமு! சிரோமணியைப் பற்றி அடிபடும் செய்தி உண்மையாகத்தான் இருக்கும்போலிருக்கிறது' என்றார். 'ஏன்? மேற்கொண்டு ஏதாவது நம்பகமான தகவல் கிடைத்ததா! என்ன?' என்று கேட்டேன். 'தகவலா? இதோபார்!' என்று பத்திரிகையில் கொட்டை

55

எழுத்துக்களில் பிரசுரமாகியிருந்த ஓர் செய்தியைக் காண்பித்தார். அதில் காணப்பட்ட விஷயம்:—

பிரபல தென்னிந்திய சினிமா நடிகர்

குடித்துவிட்டுத் தெருவில் கிடந்த கோரக் காட்சி!

—பம்பாய்-மே...

இன்று தாஜ்மஹால் ஹோட்டலுக்கெதிரில் ஒருவர் மிதமிஞ்சிய குடியால் பிரக்ஞையற்றுக் கீழே விழுந்து கிடந்தார். பேர்வழி கொஞ்சம் நல்ல அந்தஸ்தில் உள்ளவராகக் காணப்பட்டது. அவரிடம் இருந்த சில கடிதங்களிலிருந்து அவருடைய பெயர் கே. டி. ரங்கநாத சிரோமணியென்றும், அவர் சென்னையைச் சேர்ந்தவரென்றும், கமனி பிக்சர்ஸார் பிடித்துவரும் படத்தில் இவர் சாணக்யராக நடிப்பவரென்றும் தெரிய வருகிறது'' என்று இருந்தது.

இதற்குமேல் என்ன தகவல் வேண்டும்? பத்மஜா, வாஸு எல்லோரும் பார்த்த பேர்வழி சிரோமணியே என்பது நன்றாக ஊர்ஜிதமாகிவிட்டது.

காலம் போகிற போக்கைப் பார்த்தாயா? எவ்வளவு சீக்கிரத்தில் இந்தச் சிரோமணி எப்படி கெட்டழிந்துவிட்டது பார்த்தாயா? சே! சே! ரொம்ப மோசம்! அன்று சௌந்தரம், தன் அகமுடையான் சினிமாவில் சேர்ந்து நடிக்கிறான் என்ற பெருமை தாளாமல் ஆயிரம் ரூபாய் செக்கை எடுத்துக்கொண்டு ஓடோடியும் வந்து சொன்னபோது, 'நிஜமாகவே நீ இதைப்பற்றிச் சந்தோஷப்படுவதானால், ரொம்பவும் முட்டாள்தனம் என்றுதான் சொல்வேன்,' என்று மன்னி சௌந்தரத்தினிடம் சொன்னபோது ''ஏன்? என்னவாம்?'' என்று தன் பெண்ணினுடைய அதிர்ஷ்டத்தைக் கண்டு பிறர் பொறாமைப்பட்டுவிடுகிறமாதிரி மாமியார் கேட்டாரே! இப்பொழுது என்ன பதில் சொல்லப் போகிறாரோ பார்ப்போம். எனக்கிருந்த ஆத்திரத்தில் அதைக் கொண்டு உடனே மாமியாரிடம் கொண்டு காட்டி விட வேண்டும்போலிருந்தது. ''பொறுங்கள் அலமு. அவர்தான் (மாமியார்) ஏதோ தெரியாமல் 'சொல்லிவிட்டார். கொஞ்சம் தெரிந்தவர்கள் என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கும் நமக்கும் அவருக்கும் அப்புறம் என்ன வித்தியாசம் இருக்கிறது? திடீரென்று சொன்னால் மனஸுக்கு ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொள்வார். அத்துடனா நிற்கும்? உடனே விஷயம் சௌந்தரத்துக்கு எட்டும். பாவம்! அது அலறியடித்துக்கொண்டு ஓடிவந்து இப்பொழுதே பம்பாய்க்குக் கிளம்ப வேண்டுமென்று சொல்லும். முதலில் உங்கள் அகத்துக்காரரும், வாஸுவும் போய் நிலைமையைத் தெரிந்துகொள்ளட்டும். பிறகு நாம் போகலாம். ஆனால் இதற்குள்

இது ரொம்ப பேருக்குத் தெரிந்துவிட்டிருக்கும். அப்படியேதான் இருந்தாலும் தானாக வெளி வந்து சௌந்தரத்துக்குத் தெரிகிற போது தெரியட்டும். நாமாகச்சொல்லி அதன் மனதைக் குழப்ப வேண்டாம்'' என்று மன்னி சொல்லி முடித்தாள். அவள் சொல்வதும் நியாயமாகத்தான்பட்டது.

'சரி, மேற்கொண்டு செய்ய வேண்டியது என்ன? ரொம்ப கெட்டிக்காரன் என்று பார்த்தேன், முட்டாள்! கடைசியில் படுகுழியில் போய் விழுந்துவிட்டானே. அவனைச் சொல்லியும் பயனில்லை. காலத்தினுடைய போக்கு அப்படியிருக்கிறது' என்றார் 'இவர்'.

'செய்வதென்ன? ராத்திரி மெயிலுக்கு நீங்களும், வாஸுவும் பம்பாய்க்குப் புறப்பட வேண்டும். போய் உள்ள நிலைமையைத் தெரிந்துகொண்டு 'படத்தில் நடித்தது போறும். ஊருக்கு வா போகலாம்' என்று சொல்லி சிரோமணியை இங்கே அழைத்துக்கொண்டுவிட்டு மறு வேலை பார்க்க வேண்டும். இனிமேல் ஒரு நிமிஷங்கூடத் தாமதிப்பதற்கில்லை' என்றேன்.

இவரும், வாஸுவும் ராத்திரி பம்பாய்க்குப் போவதாக இருக்கிறார்கள். அதற்குள் கமனி பிக்சர்ஸ் சொந்தக்காரரைப் பார்த்து விவரம் தெரிந்துகொள்வதற்காக கமனி பிக்சர்ஸ் சொந்தக்காரரின் வீட்டுக்குப்போயிருக்கிறார்கள். முடியுமானால் எப்படியாவது கண்டிராக்டை ரத்து செய்துவிடப் பிரயத்தனப்படுவதாக வாஸு சொல்லியிருக்கிறார்.

ஆமாம். முன் கடிதத்திலேயே எழுத வேண்டுமென்றிருந்தேன். மறந்தே போய்விட்டேன். எல்லாம் நம்ம ராவ்பகதூர் மாமாவைப்பற்றித்தான். பாவம்! போன வாரம் பத்திரிகையில் வெளியாகியிருந்த ஒரு செய்தியைப்பார்த்து அவர் எங்கே மூர்ச்சை போட்டு விழுந்துவிடப்போகிறாரோ என்று பயந்து போய்விட்டேன். இதுவரை அப்படிப்பட்ட ஸமாசாரம் ஒன்றும் வராததால் நல்லபடியாக அப்படி ஒன்றும் நேர்ந்துவிடவில்லை என்றுதான் நினைக்கிறேன். எல்லாம் போன வாரம் அரசியல் நிர்ணய சபையில் நிறைவேற்றப்பட்டிருக்கும் பட்டங்கள் ஒழிப்பு தீர்மானத்தைப் பற்றித்தான் சொல்கிறேன். இந்த ராவ்பகதூர் பட்டத்தைப் பெறுவதற்கு மாமா என்ன பாடு பட்டார்! எத்தனை உத்தியோகஸ்தர்களுக்கு எவ்வளவு டீ பார்ட்டி! கலெக்டர் துரையவர்களிடம் எத்தனை தரம் பேட்டி! கிராமத்துக்கு அவர் விஜயம் செய்துவிட்டால் என்ன மரியாதை! என்ன தடபுடல்! அடேயம்மா! எண்சாண் உடம்பையும் ஒரு சாணாகக் குறுக்கிக்கொண்டு கலெக்டரிடம் அவர் காட்டிய பயபக்தி! இப்பொழுது நினைத்துக்கொண்டால்கூட ஐயோ பாவம் என்றுதான் தோன்றுகிறது. போன வருஷம்கூட புதுவருஷப் பட்டங்கள் ஜாப்தாவில் தன்னுடைய பெயர் வந்திருக்கிறதா (திவான் பகதூர் பட்டம்) என்று பத்திரிகையை அவசர அவசரமாக மாமா புரட்டிப் பார்த்தபோது, நான் சொன்னேன். தேசிய இயக்கம் வலுவடைந்துவிட்டது, பட்டங்களெல்லாம் காற்று வாக்கில் பறக்கின்றன. இந்த சமயத்தில் பட்டத்தில் மோகம் கொண்டிருப்பதில் அர்த்தமே இல்லை மாமா. இப்பொழுதெல்லாம்பதவி மோகம் தான் பலமாயிருக்கிறது' என்று. அதற்கு அவர், 'போடி பைத்தியமே. எதற்காக எது நிற்கும்? ஒரு திவான்பகதூர் என்றால் சாதாரண விஷயம் என்றுநினைத்துவிட்டாயா? அதற்கென்று உள்ள கோஷ்டியில் அதற்குள்ள கௌரவம் வேறு தான். உனக்

''.....பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்த இவர், கையில் பத்திரிகையுடன் நாங்கள் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்தார்.....''

கென்ன தெரியும்? இந்த திவான்பகதூர் பட்டத்தைப் பெற நான் செய்திருக்கும் ஸாஹஸங்கள் எப்படிப்பட்டவை என்று உனக்குத் தெரியுமா?' என்று பதில் சொன்னாரே, ஞாபகம் இருக்கிறதா? பாவம், அப்படிப்பட்ட ஒரு மதிப்பையும், ஆவலையும் வைத்திருந்தவருக்கு இந்த மாதிரியான ஒரு செய்தி பேரிடியைப் போன்ற ஓர் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

ஆனால் இதனால் அம்மாமிக்கு ஒரு விதத்தில் சந்தோஷமே ஏற்பட்டிருக்க வேண்டும். இனி அடிக்கடி உத்தியோகஸ்தர்கள் வருகையையும் பார்ட்டியுமான தொந்திரவுகள் இருக்காது பார்!

என்னமோ நாம் சுலபமாகச் சொல்லிவிடுகிறோம். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதமான 'பைத்தியம்' அதை யாரால் நிறுத்த முடியும்!

அரசியல் நிர்ணய சபையில் நிறைவேற்றப்பட்டிருக்கும் இந்தத் தீர்மானம் மாமாவைப் போன்றவர்களுக்கு மிகுந்த ஆத்திரத்தைத்தான் உண்டு பண்ணியிருக்கும். என்ன செய்வது! எல்லாரையும்போல் ஸ்டிரைக் செய்கிறோம் என்று பயமுறுத்தலாமா? என்னவென்று ஸ்டிரைக் செய்வது! பட்டத்தைத் துறந்து விடுவோம் என்றா? துறந்து விட்டுமே! அவர்களும் அதைத்தானே சொல்கிறார்கள்! பாவம்! மாமா



முதல்வர்:—பயப்படாதேப்பா! 2 நாள் அதோட பழகினா போறும் சரியாயிடும்.

இரண்டாமவர்:—அதான் இத்தனை நாளா ஒன்னோட பழகறேனப்பா!

என்ன செய்யப் போகிறாரோ? ஸ்டிரைக் என்று சொல்லவே ஞாபகம் வருகிறது. அண்ணா அங்கு வந்திருந்தபோது, 'பசுவும், எருமையும் கன்று போட்டிருக்கிறது. மன்னிக்குத்தான் உடம்பு சரியாக இல்லை. அவளுடைய உடம்பு தேறுகிற வரையில் பசுவையும் எருமையையும் ஓட்டி வைத்துக்கொண்டிரு,' என்று சொன்னாளாம். அதற்கு அண்ணா, மனிதர்களுக்கே இருக்க இடம் அகப்படவில்லை! மாட்டை வேறு எங்கே வைத்துக்கொள்வது?' என்று சொல்லிவிட்டு வந்துவிட்டதாகச் சொன்னான்.

இங்கே பால்காரர்கள், தீவனங்களின் விலைவாசிகள் அதிகமாகிவிட்டதென்று ஸ்டிரைக் செய்யப்போவதாகப் பயமுறுத்தினார்கள். அவர்களுடைய குறையைக் கூடிய சீக்கிரத்தில் தீர்ப்பதாக உணவு மந்திரி அளித்துள்ள உறுதியின் பேரில் ஸ்டிரைக்கை ஒத்தி வைத்திருக்கிறார்களாம். இதற்கிடையில் பால் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. நம்ம செலவுக்கு, இந்த விலையில் வாங்கி நிர்வகிக்க முடியும் என்று தோன்றவில்லை. மாட்டுக்கொட்டகை ஒன்று கட்டிவிடுவதாக 'இவர்' சொல்கிறார். ஆகையால் பசுவையும், எருமையையும் உடனே ஓட்டி அனுப்பவும்.

நிஜமாக, இந்த ஸ்டிரைக் மாத்திரம் நடந்திருந்தால், மன்னி சொல்கிறமாதிரி, நெய், மோர், இல்லாமல்போய்விடுமே என்ற பயம்கூட இல்லை. காலையில் எழுந்தவுடனே காப்பி வாயில் மண் விழுந்துவிடுமே, என்ற திகிலல்லவா இந்த ஜனங்களுக்கு ஏற்பட்டுவிட்டது!

என்னமோ, காலையில் எழுந்தால் ஸ்டிரைக் வார்த்தைதான் காதில் விழுகிறது. எடுத்ததற்கெல்லாம் ஸ்டிரைக் போயேன்.

'ஆறு இருகரையும் வெள்ளம் புரண்டோடினாலும்......' என்று ஒரு பழமொழி சொல்வார்களே அந்தமாதிரி எல்லாரும் ஸ்டிரைக் செய்வதாகப் பயமுறுத்தி காரியத்தைச் சாதித்துக்கொள்கிறார்கள். இந்த ஏழை உபாத்தியாயர்கள் விஷயம்தான் கேட்பாரற்றுக் கிடக்கிறது' என்று பக்கத்து வீட்டுக் கணக்கு வாத்தியார், ஸ்டிரைக் பேச்சு வரும்போதெல்லாம் 'இவரிடம்' ஒரு குரல் பாடித் தீர்த்துவிடுகிறார். பாவம்! அவர் சொல்கிறமாதிரி உபாத்தியாயர்களைத் தவிர மீதி பேர்களெல்லாம் ஏதோ ஒரு மாதிரியில் தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொண்டிருப்பதாகத்தான் தெரிகிறது. அவர்கள் பண்ண பாக்கியம் அது. யார் என்ன செய்யலாம்?

இப்படிக்கு,
உன் அன்புள்ள,
அலமு.

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு
சந்தா விவரம்

(சந்தாவை முன்னதாக கட்டவேண்டும்.)

	இந்தியா சிலோன்	வெளிநாடு
1-வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணா 4

3-மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்,—"சுதேசமித்திரன்" ஆபீஸ், மவுண்ட் ரோடு, மதராஸ்.



இந்திய சர்க்கார் உணவு மந்திரி டாக்டர் ராஜன் பாபு சென்னை வந்தவுடன் டாக்டர் ராஜனும் தலைவர்களும் அவருக்களித்த வரவேற்பின்போது எடுத்த படம்.



அ. இ. கூட்டுறவு ரிஜிஸ்திரார்கள் மகாநாட்டில் தலைமை வகித்துப் பிரசங்கம் செய்தார் ராஜன் பாபு.

வேண்டும்!

ச. சீத்தாராம்

மறு பிறப்பில் மக்க ளிடை
மாநிலத்தில் வாழ
பெருமை யுள தமிழகத்தில்
பிறவி கொள்ள வேண்டும்

2

மலை வளமும் நில வளமும்
மலிந்த தமிழ் நாட்டில்
புலவன் பேறு பெற்றுப் பணி
புரியும் மனம் வேண்டும்

3

ஆலயமும் சோலைகளும்
அணி செய் தமிழ் நாட்டில்
நூல றிவை மக்கள் தினம்
நுணுகி ஆய வேண்டும்

4

நஞ்சை நிலம் நெல் கொழிக்கும்
நந்தமிழ் நன்னாட்டில்
புஞ்சை நிலம் விளை பொருள்கள்
பொலிவு பெற வேண்டும்

5

எங்கும் புகழ் ஓங்கி வரும்
எந்தமிழ் நன்னாட்டில்
மங்கலங்கள் பொங்கி நிற்க
மகிழ்ந்து வாழ வேண்டும்

"எஜமாங்களே! இது அடுக்காது: நான் பிள்ளை குட்டிக்காரன். அவ்வளவு தான் சொல்லுவேன்— அப்புறம், மேலே ஒருத்தன் எரிஞ்சுக்கிட்டுப் போறான் பாருங்க. அவனுக்குத்தான் வெளிச்சம்—" சோமுவுக்குத் துக்கம் நெஞ்சை யடைத்துக் கொண்டது. அவன் கதறிக்கொண்டே திரும்பினான்.

"ஊஹூம்! அப்படி ஒருத்தன் இருக்கிறானா?—" இந்த சொற்கள் சோமுவின் காதுகளில் விழவில்லை. காளிங்கராயன் 'கட கட' வென்று நகைத்தான். அதில் தொனித்த ஏளனமும், இறுமாப்பும் அவன் 'பெருங்கை' என்பதை மிகைப் படுத்தின. அதை தொடர்ந்து மறு பக்கம் திரும்பி, "என்ன சேர்வை. இந்தப் பயலுக்கு எவ்வளவு திமிரு பாத்தியா?—" என்றான்.

"ஆமா, அவங்காணி நிலம் குத்தகை எடுத்தவனுக்கு இம்மாம் இருந்திச்சின்னா, நாமெல்லாம் ஏது—"

"இருக்கட்டும், இதுலே நாமே முந்திக்குவம். நீ போயி, பெரிய தனக்காரரைக் கண்டுக்கிட்டு,— என்ன, நான் சொல்றது விளங்குதா?—"

"ஊம்—"

"ஆமா அவரு ஒரு பைத்தியங் கொள்ளி மனுசப்பா! அதனாலே இப்பவே அவரு கிட்டப் பக்குவமா— ஒரு மாதிரியா— சொல்லி வெச்சு அந்த நோட்டை தாக்கல் செய்து தாவா போட்டுடுவம் வர்ற வியாழக்கிழமையே சுராங்கி போட்டு அந்தப் பயலை—"

சேர்வை நெருங்கி வந்து, "அதெல்லாம் நீங்க கவலைப்படாதீங்க நம்ம பேரைச் சொன்னாலே எந்த எடமும் ஒறைஞ்சு பூட வாணும்?"

"இப்போ, எல்லாத்தையும்விட, நம்ம ஆளுங்க இருக்கிறாங்களே— கொளுவங் கூட்டறவன், குருதை தேய்க்கிறவன், வண்டிக்காரன், புல்லுக்காரி— இவங்களை யெல்லாம் கண்டு பக்குவமாச் சொல்லி வைக்கணும். என்ன?—"

"ஹூம்! அதெல்லாம் தெரியாதுங்களா? 'மீங்'குட்டிக்கி நீஞ்ச வா கத்துக் குடுக்கணும்?—"

சேர்வைக்காரன் ஆதாயத்துடன் தான் திரும்பினான்!

2

கேவலம் இருநூறு ரூபாய் பெறுமானமுள்ள பசு காளிங்கராயனுக்கு ஒரு பெரிதல்ல அவன் மனதில் புகைந்துகொண்டிருந்த வஞ்சம்தான் மூன்று மாதங்களுக்கு முன் பற்றி எரிந்தது! அவன் உத்திரவுப்படி, கொள்ளிடத்தையும் இரண்டு மைல்களையும் கடந்து இரவுக்கிரவே அந்த ஜீவன்— அவன் கொட்டிலுக்குப் பத்திரமாக வந்து சேர்ந்த பின்னர் அவனது மனம் சற்று நிம்மதியடைந்தது.

சோமு காளிங்கராயனின் பழைய பண்ணையாள். கொள்ளிடத்துக்கு அக்கரையிலிருந்த தென்னந்தோப்புக்களை அவனிடம் பகுதிக்கு விட்டிருந்தான் காளிங்கன். மூன்று வருஷங்கள் வரையில் பகுதியைக் கரூராகச் செலுத்தி விட்டான் சோமு. அந்த நான்காவது வருஷம்தான்— அவன் பாவத்தைக் கொட்டிக்கொள்வதற்கு வந்து சேர்ந்தது! ஒரு காய், குறும்பை— ஒன்றில்லை எங்கிருந்தோ குடியேறிய குரங்குகள் நிரந்தரமாக அந்த தோட்டத்தை ஒப்புக்கொண்டு விட்டன! அந்த வருஷம் சோமு காளிங்கனிடம் எவ்வளவோ மன்றாடியும் பயனில்லை. பகுதி தன்னுபடி செய்ய மறுத்து விட்டான். சோமு பஞ்சாயத்துச் சபையில் விண்ணப்பம் செய்து கொண்டதன் பேரில் பஞ்சாயத்துத் தலைவர் சோமுவின் பக்கம் தீர்ப்பளித்து விட்டார். முடிவில்— ஆறு வருஷங்களுக்கு எழுதியிருந்த குத்தகைச் சீட்டையும் காளிங்கன் பலவந்தமாக விடுதலை வாங்கிக்கொண்டான்.

இந்த சம்பவத்திற்கு முன், சோமு காளிங்கனிடம் குடும்பச் செலவிற்காக நூறு ரூபாய் கடன் வாங்கியிருந்தான். அது தீர்க்கப் படாமலேயே இருந்து வந்தது. இந்த மனஸ்தாபத்திற்குப்பின், காளிங்கனின் வெகு நாளைய விரோதிப்பங்காளிடம் சென்று சோமு பகுதிக்கு ஒப்புக்கொண்டதும், காளிங்கனின் கோபம் கொழுந்துவிட்டெரிந்தது. இதன் விளைவுதான், மூன்று மாதங்களுக்கு முன் ஒரு நாளிரவு சோமுவின் பசு காணமற்போனதற்குக் காரணமாயிற்று!

மூன்று மாதங்களாக இரவு பகலின்றி தேடி அலைந்த சோமு தன் உரிமைப்பொருளின் இருப்பிடம் ஒருவாறு தெரிந்தபோது, அசாத்திய மகிழ்ச்சியடைந்தான். மனஸ்தாபம் முழுவதையும் மறந்து காளிங்கனிடம் பேசிப்பார்த்தான். முடிவில், தன் கடனுக்காவது உளமைத்துக்கொண்டு கணக்குத் தீர்க்கும்படிக் கெஞ்சினான். காளிங்கராயன் அவனைக் கண்டபடி பேசி, தன் கௌரவத்தைக் குலைத்து விட்டதாகக் குற்றம் சாட்டினான். காளிங்கனின் கோபம் எல்லை மீறியபொழுது சோமுவினால் அவனெதிரில் நிற்கக்கூட முடியவில்லை.

உண்மையில் தன் பிள்ளை குட்டிகள் வாழ்வதற்குத்தான் ஒருவன் அவசியம்— என்றே தன் உயிரில் பாசம் கொண்டு ஓடினான்!

வழக்கமான அந்தக் கோவில் மண்டபத்தில்— காளிங்கனின் வழக்கு எடுத்துக்கொள்ளப்படும்

பொழுது. அந்திப்பொழுதிற்கு நான்கு நாழிகைகள் இருந்தன. சிறு தூறல் போட்டு ஓய்ந்திருந்தது. குளத்தங்கரை வழியாக வந்துகொண்டிருந்த ஊர்க்காலி மாடுகளின் சதங்கை ஒலி சற்று நேரத்திற்கொருதரம் ஒலித்துக் கொண்டிருந்தது.

வயதான அந்த பஞ்சாயத்துத் தலைவர் இரு கைகளாலும் தலையைத் தடவிவிட்டுக் கொண்டிருந்தார். முப்பது வருஷங்களுக்கு மேலாக மண்டையிலேயே ஊறி அநேகம் பிரச்னைகளைத் தீர்த்திருந்த அந்த உள்ளம்-அன்றைய தீர்ப்புக்காகப் போராடிக் கொண்டிருந்தது. ஏன்?—சுலபமான ஒரு பிரச்னை 'பட்சபாதம்' என்ற பளுவினால் தீர்க்கப்படாமலிருந்தது! ஆனால், எதிரிலிருந்த இலவமரத்தின் மெல்லிய காம்புகளில் ஊசலாடிக் கொண்டிருந்த இரண்டிரண்டு காய்கள் அவரது மனத்தராசுக்கு உவமை கூறிக்கொண்டிருந்தது. முடிவில், தனது தீர்ப்பைக் கூறும்பொழுது அவரது நெஞ்சு உலர்ந்து விட்டது.

"வாதியான காளிங்கராயர் செய்து கொண்ட 'பிரியாதின் படி, பிரதிவாதியான சோமு வாதிக்குக் கொடுக்கவேண்டிய கடனை ஒரு வார கெடுவிற்குள் செலுத்திவிட வேண்டியது. ஆனால் பிரதிவாதியின் புகாரை இந்தச் சபைதீர்மானிக்கிறபடி தன் பேரிலுள்ள மனஸ்தாபம் காரணமாகச் செய்து கொண்டதாகக் கருத வேண்டி வருகிறது தகுந்த சாட்சியங்களைக் கொண்டும், வாதியின் யோக்யதாம்சங்களைக் கொண்டும் இதைத் தீர்க்க 'வேண்டியிருக்கிறது—

சோமுவின் உள்ளம் குமுறிக் கொண்டிருந்தது. பாவம்! அன்றைய விசாரணையில் அவனது கடன் பத்திரம் ஒன்றையே திரும்பத் திரும்ப எடுத்துக்கொள்ளப்பட்டது. அவன் தன் பசுவைக்குறித்துச் சொல்லி அழுததெல்லாம் 'ஏழை சொல்' ஆகிவிட்டது. குதிரை தேய்ப்பவன் முதல், புல் வைப்பவள் வரையில் சாட்சிக்கு வந்து காளிங்கனுக்கு அனுகூலமாகக் கூறிவிட்டுச் சென்றதும் அவனது ஏழை உள்ளம் பதறிற்று.

சோமு துண்டை உதறிப் போட்டுக்கொண்டு எழுந்தான்.

'எஜமாங்களே! மூணுமாசமா ராவும், பகலுமா அலேஞ்சிருக்கேனுங்களே-அவ்வளவும் பொய்யா? இதுதானுங்களா சத்தியம்?"—க்ஷணநேரத்தில் அவன் கண்கள் நீரைக் கொட்டிவிட்டன. அவன் தொண்டை வரட்சையடைந்து விட்டது. தலை நிமிர்ந்து அவன் தன் வார்த்தையை முடித்தபோது—மண்டபம் எதிரொலிசெய்தது!

'தெய்வம் இருக்குதுங்களா?—'

ஞாபகப்படுத்துகிறோம்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்.

இறுதியான இந்தச்சொல் அவர்கள் செவியில் புகுந்ததோ இல்லையோ, மண்டபத்தின் பக்கத்துச் சந்து, குளத்தங்கரை வரையில் அந்தச் சொல் காற்றில் மிதந்திருக்க வேண்டும்! நான்குடன் ஐந்தாக மேய்ந்துவிட்டுச் சாவதானமாக வந்துகொண்டிருந்த அந்த ஜீவனுக்கு மாத்திரம் செவி கூர்மையாக இருந்திருக்கவேண்டும்! வெகுநாட்களாகப் பழகியிருந்த ஒரு குரல் திடீரென்று அதிசயமாகக் கேட்டதும், அதனால் சும்மா இருக்க முடியுமா? வாலை உயரே தூக்கிக் கொண்டு ஒரு துள்ளு துள்ளி வந்து 'ஹம்' காரத்துடன் சோமுவைச் சுற்றிச் சுற்றி வந்து முகர்ந்து பார்த்துக் கொண்டே அவனருகில் நின்றது சோமுவின் கேள்விக்கு அந்த வாயற்ற ஜீவன் பதிலளித்து விட்டது. அதன் கழுத்தைக் கட்டிக் கொண்டு முகத்தைக் கண்ணீரால் அபிஷேகம் செய்தான் சோமு.



19946

எங்கள் வீடு ஆற்றங்கரையோரம். அரசமரத்தடியும், அங்கு கோயில் கொண்டுள்ள பிள்ளையாரும், கண்கவர் வனப்புடன் விளங்குவார்கள். சமீபத்தில் சிவாலயம். அந்தக் கோயிலின் மதில்சுவரைப் பார்க்குந்தோறும் ஒரு புனிதமான உணர்ச்சி வெள்ளம், மனத்துள் பாயும். "யார் கட்டிய கோவிலோ, எந்த சிற்பியின் உள்ளத்தின் கலைக் கோயிலோ, இத்தனை அழகுடன் இன்னும் புதியதாகத் திகழுகிறது!" என்று என் மனம் சரித்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டுவிடும்.

மாலை நேரம்:— தீவாராதனை முடிந்து பக்தர்கள் சென்றுகொண்டிருந்தனர். பகலில் அடித்த வெயிலின் வெப்பம் தாங்காது, மக்கள் ஆற்றோரம் சென்றுகொண்டிருந்தனர். நமது நாட்டில் பெண்களின் பிறப்பே கொடுமையுடையது. பெண்கள், கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட, இயற்கை வசதிகளைக் கூட, அடைய முடியாமல், செய்திருக்கின்றனர் - ஆண்கள். நல்ல காற்றில் தனியாக உலாவப் போகவும் அவர்களுக்கு உரிமை கிடையாது, வீட்டில் அடைப்பட்டிருக்க வேண்டும் கூண்டுக் கிளியைப் போல். அக்கா, அக்கா என்று கிளிகள் கீச்சிட்டன. என் வீட்டு வாயிலில் திடீரென மூன்று குழந்தைகள் காணப்பட்டனர். என் மனதில் காரணம் தெரியாத வெறுப்பு ஏற்பட்டது. ஆனால் குழந்தைகளோ அவர்களைக் கண்டதும், மலர்ந்த முகத்துடன் வரவேற்றனர். வீட்டில் இரவு பலகாரத்திற்காக வைத்திருந்த தோசையின்மேல்-என் குழந்தைகளின் கண்ணோட்டம் சென்றது. வந்திருந்த பிச்சைக்காரப் பிள்ளைகள் அழகிய குரலில் பாட ஆரம்பித்தனர். தாயுமானவர் பாடலிலிருந்து டாக்கிப் பாட்டுக்கள் வரை அவர்கள் கற்று வைத்திருந்தனர். பாட்டுக்கள் யாவரையும் பரவசப்படுத்தின—அதன் பயன் அன்று இரவு நான் பட்டினியேயிருக்க வேண்டி வந்ததுதான். அதிலிருந்து அவர்கள் தினமும் வர ஆரம்பித்தனர். பழக்கத்தின் தன்மையாலோ அல்லது என்ன காரணத்தாலோ, அந்தச் சிறுவர்களிடம் எனக்கு அன்பு தோன்றவாரம்பித்தது. ஒரு நாள், ஏண்டா பையன்களா! உங்களுககுத் தாய் தகப்பனார் இருக்கிறார்களா? என்று கேட்டேன். "இருக்காங்க' என்ற ஆவல் நிறைந்த பதில் அவர்களில் வயதில் சிறிய பிள்ளைகளிடமிருந்து வந்தது.

எங்கு இருக்கிறார்கள்"?

"ஜெயிலில்"

நான திடுக்கிட்டேன். "ஏன்"

"எங்கப்பா மறியல் செய்தாங்க" நான் தொடர்ந்து "அம்மாவும் சத்யாக்ரகம் செய்தாளோ, எனவும், பையன் சிறிது வெட்கமும், நாணமும் கலந்த குரலில் இல்லை. திருட்டுச் செய்தாள்—எங்களுக்காக. சேர்ந்தாப்போல் நாலு நாளாய் வீட்டுல் சோறில்லை.—அங்கொரு பணக்கார வீட்டில் புகுந்து, வெள்ளிக் கிண்ணத்தைத் திருடிக் கையும் களவுமாய் பிடிபட்டுத் தண்டனையடைந்துவிட்டாங்க, என்று சொன்னவுடன், என் மனம் கொதித்தது. ஐயோ! பெண்கள் நிராதரவான நிலையை அடைந்தால், பிழைக்கும் வகை அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இந்நாட்டில்! என்ன பரிதாபம்! எத்தனை நேரம் இந்த யோசனையிலாழ்ந்தேன் என்பது தெரியவில்லை. இன்னொருநாள் அந்தக் குழந்தைகள் வந்தன. வழக்கம் போல் தின்பண்டம் தின்ற பின்பு. அவர்களில் பெரியவன் என்னைப் பார்த்து, "அம்மா, உங்களைப் பார்த்தால், என் தாயின் நினைப்பு உண்டாகிறது. உங்களது அன்பு வெள்ளம் என் மனத்துக்கத்தை ஆற்றுகிறது. எத்தனை நாளை நாங்களிப்படி ஆதரவின்றி அலைவது? பகவானின் அருள் வெள்ளம் என்று எங்கள்மேல் பாய்கிறதோ. அன்றல்லவா நல்லநாள்,—அந்த நாளும் வந்திடாதோ—என்று பாட ஆரம்பித்தான். நான் சிரித்து, "பையா! ஏது ரொம்ப வேதாந்தியாகி விட்டயா? மேடைப் பிரசங்கிகூட உன்கிட்டேப் பேச்சுக்கலையைப் பிச்சை தான் வாங்கவேணும்" என்று வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தோம்.

வானம் இருண்டது. உலகம் நடுங்கியது. மழையும், காற்றும் கலந்தடித்தது. எல்லாரும் அவரவர்கள் வீட்டினுள் புகுந்து கொண்டனர். "ஹோ" வென்ற இரைச்சலுடன் 'தாமிரா' நதி ஓடிக்கொண்டிருந்தாள். இரவு பெய்த மழையும் ஒருவாறுக ஓய்ந்தது. பிள்ளைகள் காகிதக் கப்பல் செய்து தெருவில் தேங்கியிருந்த நீர்களில் மிதக்கவிட்டனர்—நானும் மனதில் ஒருவித எண்ணமுமின்றி வாயிலில் நின்றிருந்தேன். ஆற்றுக்குச் சென்று திரும்புபவர்கள் யாவரும் வருத்தம் முகத்தில் தோன்ற சென்று கொண்டிருந்தனர். விசாரித்ததில், அந்தப் பிச்சைக்கார சிறுவர்கள் மூவரும், ஒன்றுக, தண்ணீர் வற்றிய பள்ளத்தில் இறந்து கிடப்பதாக அறிந்தேன். என்மனம் குமுறியது. போய்ப் பார்த்தபோது, நேற்று என்னிடம் பேசிய வாலிபன், அதே புன்னகையுடன், தன இரு கைகளாலும்,சகோதரர்களைத் தழுவிய வண்ணம், இறந்து கிடந்தான் "உனக்கு அருள் வெள்ளம் வந்த விதம் இப்படியா? என்று எனது வாய் முணு முணுத்தது.



ஹஸ்தினபுரத்தில் கண்ணபிரான் அடியெடுத்து வைத்ததும் அந்த நகரமே ஒரு புதிய சோபை பெற்றதுபோல விளங்கியது. நகரத்தைச் சூழ்ந்த சோலைகளில் வழக்கம் போலத்தான் அன்றும் வண்டுகள் பாடின, மயில்கள் ஆடின. ஆனால் வண்டுகளின் ரீங்காரத்திலே அன்று புதியதோர் உவகை ஒலி செய்தது. தோகை விரித்தாடிய மயிலின் நடனத்திலும் ஒரு புதிய எக்களிப்பு, தாண்டவமாடிற்று. இயற்கையே கண் திறந்து மனம் உவந்து கண்ணனை வரவேற்பதுபோலத் தோன்றியது:

உம்பர் நாயகன் வரவுகண்(டு)
உளம்களி கூர்ந்து
தும்பி பாடின; தோகைநின்(று)
ஆடின சோலை!

[உம்பர் நாயகன்-தேவதேவனாகிய கண்ணன். களிகூர்ந்து-களிப்பு மிகுந்து. தும்பி-வண்டுகள். தோகை-மயில்கள்.]

ஒரே குதூகலம்

தாமரைப் பொய்கைகளில் மலர்ந்திருந்த செந்தாமரைப் பூக்களும் முகமலர்ந்து அகமகிழ்ந்து கண்ணனை வரவேற்றன. நகரத்தின் வெண்ணிறக் கொடிச் சீலைகளும் ஆகாய கங்கை அலை வீசுவதுபோலப் படர்ந்து பரந்து கண்ணன் வரவு கண்டு அவ்வரவைத்

81

தூதும் துராலோசனையும்

★

துரிதப்படுத்துவதுபோல் களி கூர்ந்து கை காட்டின.

வீதிகளில் எல்லாம் "கண்ணன் வரப் போகிறார்; வந்து விட்டார்: என்ன வசீகர மேனி!" என்ற பேச்சு—"போங்கள்; விலகுங்கள்" என்ற ஓசைகள். சிற்றரசர்களும் சேனை வீரர்களும் யானை மேலும் குதிரை மேலும் எதிர் எதிர் நின்று மயங்கி, முன்னும் போகாமல், பின்னும் போக முடியாமல், பக்கங்களிலும் இடம் பெயர்ந்து விலக முடியாமல், அப்படி அப்படியே பிரமித்து நின்றார்கள்.

பல மாளிகைகளிலும் வலம்புரிச் சங்குகள் முழங்கின; பார்க்க வந்த பெண்களின் பாதச் சிலம்புகள் கலீர் கலீர் என்று சப்தித்தன; நகரமெங்கும் முரசுகள் அதிர்ந்தன.

தூதுவிட்டுத் தீ வைத்தவர்

செம்பொற் குன்றுபோலத் திகழ்ந்த அரண்மனைக்கெதிரே தூரத்தில் ஒரு சோலையிலே கண்ணன் தங்கினார்; தாம் வந்திருப்பதாகத் துரியோதனனுக்கு முன் கூட்டிச் செய்தி சொல்லி அனுப்பினார்.

அன்று தூதுகொண்(டு)
இலங்கை தீ
விளைத்தவன், ஐவர்க்(கு)
இன்று தூது வந்(து), எயிற்
புறந்(து)
இறுத்தனன் என்னு,
துன்று தூதுவண் டினம்முரல்
தொடையலான் தனக்குச்
சென்று தூதுவர் இயம்பினர்,
சேவடி வணங்கி.

[தீவிளைத்தவன்- தீவைக்கும்படி செய்தவன். எயிற்புறத்து-மதிற்புறத்திலே. இறுத்தனன்-தங்கினான். என்னு—என்று. துன்று—நெருங்குகிற. தூதுவண்டு—(மாதர்கள்) தூதாக விட்ட வண்டு. வண்டினம்—வண்டுகளின் கூட்டம். முரல்-ரீங்காரஞ்செய்கிற, தொடையலான்—மாலையையுடைய துரியோதனன். சேவடி-செம்மையான அடிகள்.]

கண்ணன் அனுப்பிய தூதர்கள் போய், "அன்று அனுமானைத் தூதுவிட்டு லங்காதகனம் செய்தவர் இன்று பாண்டவர்களுக்காகத் தூது வந்திருக்கிறார்; மதிற்பக்கத்திலுள்ள சோலையில் தங்கியிருக்கிறார்!" என்று சொன்னார்களாம். அன்று தூதனுப்பி இலங்கையை எரித்தவர் இன்று தாமே தூது வந்து விட்டதால், இந்த நகரத்திற்கும் எத்தகைய கேடு விளையப்போகிறதோ? — என்பது குறிப்பு.

மாமாவும் மருமகனும்

ஆனால் இந்தக் குறிப்பைத் துரியோதனன் கவனிக்க

வில்லை; 'கண்ணன் வந்தான்' என்றதும், அரண்மனையையும், சுற்றுமுள்ள வீதிகளையும் அலங்கரிக்க வேண்டுமென்று உத்தரவு செய்தான். தானும் எதிர்கொண்டு கண்ணனை வரவேற்க வேண்டுமென்று தீர்மானித்தான். எல்லாம் தன் கௌரவத்திற்காகத்தான், கண்ணனையும் கௌரவிக்க எண்ணினான். ஆனால் சகுனி மாமா, "ராஜாதி ராஜனாகிய நீ மாடுமேய்த்த கோபாலனுக்கு எதிர்சென்று மரியாதை செய்வதா?" என்று சிரித்து, மருமகனைத் தடுத்து விட்டான்:

"என்னை நீ அவற்(கு) எதிர்
[செல்வ(து)?"
என்றுதன் மருகன்
தன்னை வன்பொடு தகைந்தனன்,
கொடுமைகூர் சகுனி.

[அவற்கு-அவனுக்கு. வன்பு-வலிமை. தகைந்தனன்-தடுத்தான். கொடுமைகூர்-கொடுமை மிகுந்த.]

மாமா சொன்னது சரிதான் என்று மருமகனுக்குத் தோன்றியது. ஆகவே அவன், "கண்ணன் தங்குவதற்கு ஒரு பெரிய மாளிகையைச் சித்தஞ்செய்யுங்கள். அதைக் கண்காட்சியாக அலங்கரியுங்கள்" என்று உத்தரவு செய்துவிட்டு, தான் தன்னுடைய தங்கச் சிங்காசனத்தில் ஜம்மென்று வீற்றிருந்தான். வீற்றிருந்து சகுனியுடன், "மாடு மேய்த்தாலென்ன? மாமா! அவன் ஆடு மேய்த்தாலென்ன? இன்று மனிதரை மேய்க்கிறான், ஏய்க்கிறான் மாயக் கண்ணன்! நாமும் மனிதரை ஏய்த்தும் மேய்த்தும்தானே ஆட்சி செலுத்துகிறோம்; ஆடம்பர அதிகார போக பாக்கியங்களையெல்லாம் அனுபவிக்கிறோம். ஆகவே, நாம் அவனையும் ஏய்ப்பதற்காவது உபசரிக்க வேண்டியதுதான்!" என்றான். மருமகனுடைய புத்திசாலித்தனம் மாமனைக் களிப்புக் கடலில் ஆழ்த்திவிட்டது.

அண்ணனும் தம்பியும்

துரியோதனனும் மாமனும் பேசிக்கொண்டிருக்கையில், அரண்மனையில் வேறொரு புறத்திலே திருதராஷ்டிரன் விதுரனுடன், "தம்பி! அவர் வருகிறாரே, மரியாதை செய்ய வேண்டாமா? விருந்து செய்ய வேண்டாமா? யாதவக் குறுநில மன்னராயினும் பெரிய புத்தியுடையவர் அல்லவா? துவாரகைச் சிற்றரசனை மூன்று உலகங்களுக்கும் முடிவற்ற ஏகாதிபத்தியம் வகிக்கும் ராஜாதி ராஜன் என்கிறார்களே, அவருக்கு அதிதி பூஜை செய்ய வேண்டாமா? நந்நான்கு சிறந்த குதிரைகள் கட்டிய பொன் மயமான பதினறு தேர்களைக் கண்ணன

கண்ணனுக்குக் கொடுக்க வேண்டுமென்று எண்ணுகிறான் துரியோதனனும். மேலும் எட்டு யானைகளையும் பரிசளிக்கப் போகிறானும்'' என்று குதூகலமாகப் பேசினான்.

ஞானபோதமும் துர்ப்புத்தியும்

அதற்கு விதுரன், "மகாத்மாவான கண்ணபிரானை அப்படியெல்லாம் ஏமாற்ற முடியுமா? அண்ணா! நீர் முதுமைப் பருவத்தில் இப்படிக் கபட நாடகம் ஆடலாமா? மோசம் நாசமல்லவா? பொருளால் பரம் பொருளை அபகரிக்க முடியுமா? கடலைவிட்டு அலைகளைப் பிரிக்க முடியாததுபோல் கண்ணனிடமிருந்து ஐவரையும் வேறுபடுத்த முடியாதே! கண்ணனும் அர்ச்சுனனும் கதிரவனும் ஒளியும் போல் ஒன்றல்லவா? பாண்டவர்களுக்கு நீதி செலுத்துவதே நீர் செய்யத்தக்க கிருஷ்ண பூஜை; இதுதான் அவர் விரும்பும் அரும்பொருள்!'' என்று பதில் சொன்னான்.

அச்சமயம் அங்கே வந்த துரியோதனன், "சிற்றப்பாவே! நீர் சொன்னதைக் கேட்டுக்கொண்டுதான் வந்தேன். நீர் சொன்னதெல்லாம் உண்மை. கண்ணன் ஐவரிடம் பட்சபாதமுள்ளவர்தான். அவரை நாம் வசப்படுத்த முடியாது; ஆகவே பொருள் கொடுக்க வேண்டாம்; பூஜை செய்யவும் வேண்டாம். 'பயத்தால் நம்மைப் பூஜிக்கிறார்கள்!' என்று அவர் நினைக்கவும் கூடும்'' என்று சொன்னான்.

கண்ணனைக் கட்டுதல்

அப்போது பீஷ்மர், "துரியோதனா! நீ பகவானை அவமதிக்கலாகாது; அவமதிக்கவும் முடியாது. பூஜிக்காதவர்களிடத்திலும் அவருக்குக் கோபம் கிடையாது; அவமதித்தவர்களையும் அவர் அவமதியார். அந்த நஷ்டம் அவருக்கு அல்ல; நமக்குத்தானே! அவரது தர்மாவேசம் எரித்துவிடுமே! அடா, துரியோதனா! பார்த்துப் பிழைத்துப்போ'' என்று புத்தி சொன்னார்; துரியோதனன் பிரியப்படாத வார்த்தைகளை உறுதியாகச் சொன்னார்.

மறுபடியும் அவர் துரியோதனனை முகம் நோக்கி, "குழந்தாய்! நீ க்ஷேமமாக இருக்க வேண்டுமென்றுதானே எனக்கு ஆசை? கோபாலர் அன்பிற்குக் கட்டுப்பட்டவர். சகாதேவன் அன்புக் கயிற்றால் அவரைக் கட்டிவிட்டதாக அறிகிறேன். அப்படி உனக்கும் அவர் கட்டுப்பட்டால், பாண்டவர்களும் கட்டுப்படுவார்களே! அதுவே உனக்கு வெற்றி, பெருஞ் செல்வம். இந்தச் செல்வத்தை அடைய இதுவே தருணம்'' என்றார்.

உடனே துரியோதனன், "ஓ பிதாமஹரே! ஆம், கட்டப் போகிறேன்; பாண்டவர்களின் முக்கிய கதியைக் கட்டப்போகிறேன்! அவர் கட்டுப்பட்டால் பாண்டவர்களும் பூமியும் எனக்கு வசமாகி விடுவார்கள்! இல்லையா? தாத்தா! சரியான ஆலோசனை. ஆசாமி காலையில் இங்கு வருவார். அபாயமில்லாத ஓர் உபாயத்தால் கட்டிப் போடப் போகிறேன் கள்ளக் கிருஷ்ணனை! ஆனால், தாத்தா சொல்லுகிற அன்புக் கயிறு என்னிடம் கிடையாது. அந்தக் கயிற்றைச் சகாதேவன் எந்தக் கடையில் வாங்கினானோ? அந்தக் கடையும் அந்த அபூர்வச் சரக்கும் ஹஸ்தினாபுரத்தில் விதுரர்வீடு தவிர வேறெங்கும் காணக் கிடைப்பதில்லை! அன்புக் கயிறுபோன்ற இன்பக் கயிறு கொண்டு கட்டுவதற்கா நான் தயாராயிருக்கிறேன்? துன்பக் கயிறு, துன்பச் சங்கிலி, துன்ப விலங்கு பூட்டுவேன்; சிறையில் மாட்டுவேன்; என் கீர்த்தியை நிலைநாட்டுவேன்; ஐவரையும் மீண்டும் காட்டுக்கு ஓட்டுவேன்!'' என்றெல்லாம் கர்ஜிக்கத் தொடங்கினான்.

தந்தையின் சங்கடம்

திருதராஷ்டிரனும் பயந்துபோனான். "ஐயோ! சம்பந்தியல்லவா? அதிதி அல்லவா? தூதரல்லவா? நண்பராக அல்லவா யாதவப் படைகளை நமக்குத் துணையாய் அனுப்பி வைத்திருக்கிறார்? அவரைக் கட்டலாமா? கட்டத்தான் முடியுமா? பொல்லாத மாயாவி அல்லவா? பிள்ளாய்! மண்டலேச்வரனாக வாழ்ந்து கொண்டிருக்கும் நீ விரைவில் கிருஷ்ண கோபத்தால் வம்ச நாசம் ஆகவேண்டாம். மாமா சொல்லிக்கொடுக்கும் மந்த புத்தியை விட்டுச் சொந்தப் புத்திகொண்டு பிழைக்கவேண்டும்'' என்று தந்தை மகனுக்குப் புத்தி சொன்னான்; தாத்தாவின் வார்த்தையைத் தட்டிப் பேசுவது அபாயம் என்று எச்சரிக்கையும் செய்தான்.

பீஷ்மரோ, துரியோதனன் பேசிக்கொண்டிருக்கும்போதே "பாவி! மகாபாவி!'' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே எழுந்திருந்து அங்கிருந்து போய்விட்டார். பிறகு திருதராஷ்டிரனும் துரியோதனனை நோக்கி; "உன் துர்ப்புத்தி கண்ணனுக்குக் கேடு விளைக்க முயன்றால், அது குல நாசம், தேச நாசமாக முடியும்!'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்தும் புறப்பட்டான். துரியோதனனும் மிக்க கோபத்தோடு சகுனியுடன் சூழ்ச்சி செய்யப் போய்விட்டான்.

* * * *

மறுநாள் விடியற்காலம் கண்ணபிரான் எழுந்திருந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு துரியோதனனது அரண்மனையை நோக்கிப் புறப்பட்டார்.



குழந்தைக் கலை

ஆர். லக்ஷ்மி அம்மாள்

கண் திறவாமல் சிறகு முளையாமல் இருக்கிற சிறு குஞ்சுகளைத் தாய்ப் பறவைகள் சிறகின் கீழ் அணைத்துப் பாதுகாப்பது போல், மனிதத் தாய்மாரும் தங்கள் குழந்தைகளை ஈ மொய்க்காமல், எறும்பு கடியாமல், பனியும் வெயிலும் படாமல், மார்பிலும் தோளிலும் வயிற்றிலும் அணைத்துப் பாலூட்டிச் சீராட்டிப் பாதுகாக்கிறார்கள். நீராட்டுகிறார்கள்; மூக்குச் சிந்தி நாசி ஊதிச் செவி உருவி, நாக்கு வழித்து, விழிக்கு மை எழுதி உச்சி மோந்து, கண்ணோடுகண், வாயோடுவாய், முகத்தோடு முகம் வைத்துக் கொஞ்சி முத்தாடி மகிழ்கிறார்கள்.

அன்பும் வேண்டும்; அறிவும் வேண்டும்,

இப்படி அருமை பாராட்டிப் பிள்ளைமைச் செல்வத்தைப் பெருஞ் செல்வமாக மதிக்கிறவர்களுக்கு, தங்கள் குழந்தைகள் ஸ்தூல வாழ்வோடு சூட்சும வாழ்வும் உடையவர்கள் என்பது தெரியுமா? இப்படிக் கொஞ்சும் தாயின்பம் குழந்தைக்கும் இன்பமாகிக் குழந்தைக் கல்வியின் ஆரம்ப நிலை என்பது தெரியுமா? குழந்தைக் கல்வியென்றால் குழந்தையின் ஸ்தூல சூட்சும வளர்ச்சியென்பதுதான் கொஞ்சி மகிழும் தாயாருக்குத் தெரியுமா? அன்புத் தாய்மார் அறிவுத் தாய்மாராகவும் விளங்கவேண்டாமா?

சூட்சும வாழ்க்கையின் தூண்டுதல், துடிப்புக்கள் எல்லாம் குழந்தையின் உள்மனத்திலே அமைந்திருக்கின்றன. மனிதக் குழந்தை பறவைக் குஞ்சைக் காட்டிலும், குட்டிமிருகங்களைக் காட்டிலும் மெள்ள மெள்ளத்தான் இயங்குகிறது. பிறந்ததும் குழந்தை ஒளியையும் ஒலியையும் ஸ்பரிச உணர்ச்சியையும் உணர்ந்துகொள்கிறது: ஆனால் எழுந்திருக்கும் ஆற்றலோ, நடக்கும் சக்தியோ, பேசும் சக்தியோ, விரைவில் பெறுவதில்லை. "ஏன் இப்படி?' என்பதைத் தாயார் ஆலோசித்துப் பார்க்க வேண்டும்.

தளர் நடை நடவானோ?

ஓராண்டுக்குப் பின்பு பெரு முயற்சி செய்து தள்ளாடி விழுந்து விழுந்துதான் குழந்தை நடக்கக் கற்றுக்கொள்கிறது. இரண்டாவது வயதிலேதான் சரியானபடி நடக்கிறது. "என் செல்வக் குழந்தையின் காலைப் பார், கையைப் பார்; மூக்கைப் பார், முகத்தைப் பார்'' என்றெல்லாம் தாய் கொஞ்சிப் பேசுகிறாள். குழந்தை காலின் கட்டை விரலைப் பிடித்துச் சுவைப்பது கண்டு குதூகலம் அடைகிறாள்.

பேதைக் குழவி பிடித்துச்
சுவைத்துண்ணும்
பாதக்கமலங்கள் காணீரே!
பவளவாயீர்! வந்து காணீரே!

என்று யசோதை மற்றக் கோபிமாரைக் கூவியழைத்துக் காட்டுவதாகப் பெரியாழ்வார் பாடுகிறார். அந்தக் குழந்தைக் கண்ணனுங்கூட உடனே நடக்கக் கற்றுக் கொள்ளவில்லை. எழுந்து நடக்கக் முயன்று தள்ளாடி விழுந்து விழுந்துதான் தளர் நடை நடக்க கற்றுக்கொண்டது அந்தத் தெய்வக் குழந்தையும்.

"வாசுதேவன் தளர் நடை நடவானோ?'' என்று, யசோதைத்தாய் தட்டித் தடுமாறி நடக்கும் குழந்தைக் கண்ணனின் இளநடையைப் பார்க்க ஆசைப்படுகிறாள். கண்ணனுக்கு ஒரு வயது நிறைந்த பிறகுதான் யசோதைக்கும் தளர் நடை காணும் பாக்கியம் கிடைக்கிறது. இரண்டு வயதுக்குப் பின்புதான் கண்ணனும் சரியாக நடை பயின்று முன்புறமாக வந்து அம்மா மடியில் அமர்வதும், பின்புறமாக வந்து முதுகிலே சாய்ந்து கட்டிக்கொள்வதுமாக விளையாடியிருக்க வேண்டும்.

பேச்சும் விரைவில் வருவதில்லை

குழந்தைக்கு மழலைப் பேச்சும் எளிதில் வந்துவிடுகிறதில்லை, ஆறு மாதம் கழித்துத்தான் உருப்படியான சில ஒலிகளாவது புறப்படுகின்றன. கன்றுக்குட்டி பிறந்ததுமே, தன் பாஷையை அறிந்து கத்துகிறது. மனிதக் குழந்தைக்கோ, அழுகை தவிர வேறு பாஷை தெரியாது. குட்டி நாய் குலைக்கிறது; குட்டிப் பூனை "மியா'' பாஷையில் தன் தேவைகளைத் தெரிவிக்கிறது. ஆனால் வாயில்லாப் பிராணிகளுக்குள்ள ஆற்றலும் பச்சிளங் குழந்தைப் பருவத்தில் மனிதனிடம் காணப்படுவதில்லை. காரணம் என்ன?

சதைப்பற்றிலுள்ள சக்திக் குறைவு தான் என்று சொல்ல முடியாது. பாலைச் சுவைத்து விழுங்கக்கூடிய ஆற்றலுள்ள குழந்தைக்குப் பேசும் ஆற்றலும், நடக்கும் ஆற்றலும் ஏன் விரைவில் ஏற்படவில்லை?

இயற்கையும் பகுத்தறிவும்

பகுத்தறிந்து செயல் செய்யும் ஆற்றல் பெறாமல் இயற்கையுணர்ச்சிகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டே மிருகங்களும் பறவைகளும் இயங்குகின்றன: தங்கள்

பாஷையில் கூச்சலிடுகின்றன. மனிதக் குழந்தைக்கோ இயற்கையுணர்ச்சியின் ஆதிக்கம் போய்ப் பகுத்தறிவின் ஆதிக்கம் ஏற்பட வேண்டியிருக்கிறது. இதற்குரிய சித்த சக்தி தோன்றும்வரை, சதைப்பற்றுகள் வலுவடைந்த போதிலும் காத்திருக்க வேண்டியதுதான்.

பிராணிகள் தங்கள் இனத்தின் இயல்புகளைத்தான் வெளியிடுகின்றன: மனிதக் குழந்தையோ ஒரு தனி ஆத்மாவின் குணத்தை வெளியிடவேண்டியிருக்கிறது. மனித வர்க்கத்துக்குரிய இயற்கையுணர்ச்சிகளினால்தான் பொதுவாகக் குழந்தைகளெல்லாம் நிமிர்ந்து நடக்கவும் பேசவும் கற்றுக் கொள்கின்றன. எனினும், ஒரு தனி ஜீவனாக ஒவ்வொரு மனிதக் குழந்தையும் வளர வேண்டியிருக்கிறதல்லவா? இப்படி வளர்ந்து, தான் கேட்டுப்பழகும் பாஷையில் மெள்ள மெள்ளப் பேசக் கற்றுக் கொள்கிறது.

குழந்தைப் பிரம்மா!

குழந்தை வளர்ப்பிலும் குழந்தைக் கல்வியிலும் இந்த உண்மையை உணர்ந்து பயன்படுத்திக் கொள்வது தாய்மாரின் கடமை. குழந்தை மெள்ள மெள்ளத்தான் தன்னுடைய சூழ்நிலையைத் தனக்கு இசைவித்துக் கொள்ள முடியும்; இசைவித்துக்கொண்டு தான் குழந்தை தன்னை மனிதனாகப் படைத்துக்கொள்ள முடியும். இப்படிக் குழந்தை, மனிதனுக்குத் தந்தையாகிறது!

இதை உணர்ந்துகொண்டால், சிறு குழந்தைக்கும் ஆத்ம வாழ்வு அல்லது மானஸ வாழ்வு உண்டு என்றும், இதில் குழந்தையின் சிருஷ்டி-சக்தி அடங்கிக்கிடக்கிறதென்றும் தெரிந்து கொள்ளலாம். இத்தகைய சக்தியால்தான் வயது முதிர்ந்தவர்கள் சிரமப்பட்டுக் கற்றுக்கொள்ளவேண்டிய ஒரு புதிய பாஷையைக் குழந்தை, விளையாட்டாகவும் உத்ஸாகமாகவும் கற்றுக் கொள்கிறது.

இந்த நிலை, தாய் மொழியிலே தான் அறிவை எளிதாகப் புகட்ட முடியும் என்ற உண்மையையும் வற்புறுத்துகிறது. நடக்கவும் பேசவும் கற்றுக் கொள்ளும் குழந்தை மேலும் மேலும் தன் சக்தியைப் பெருக்கிக்கொள்கிறது; நாளடைவில் பாஷா ஞானத்தையும் அதிகப்படுத்திக்கொண்டு அறிவுப் பிரதேசங்களை மெள்ள மெள்ள வசப்படுத்திக் கொள்கிறது. இக்குழந்தைக்கு இயற்கையும் வெளியுலகமும் உதவி செய்கின்றன; ஆனால் உள்ளுக்குள்ளேயிருக்கும் ஆத்ம சக்தி சூழ்நிலையில் தனக்கு வேண்டிய அம்சங்களை ஜீர்ணித்துப்பயன்படுத்திக் கொள்கிறது. இந்நிலையில் உள்மனத்திலிருந்து பிறக்கும் உணர்ச்சிகள் சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுப் பகுத்தறியும் மனத்தை நிர்மாணம் செய்கின்றன.

குழந்தையின் அன்பு-ராஜ்யம்

குழந்தையின் உடல்-வளர்ச்சியையும், மன வளர்ச்சியையும் கவனித்துச் சிந்தித்துப் பார்ப்போமானால், இது ஒரு சூட்சும நாடகம்போலத் தோன்றும். அன்புமயமான ஒரு சூட்சும சக்தி உள்மனத்திலிருந்து தன்னைப் படிப்படியாக வெளிப்படுத்திக்கொள்ளுகிற காட்சிகள், நாடகமேடைக் காட்சிகள்போல, அகக்கண்ணுக்குப் புலனாகும். இந்தச் சக்தி, அன்புமயமான—ஆரவார அட்டகாசங்களும் ஆர்ப்பாட்டமும் இல்லாத—சூழ்நிலையில் முழு வேகத்துடன் வேலை செய்யும். தக்க சூழ்நிலையை அமைத்து உதவுவது தாய் தந்தையர் கடன்—முக்கியமாகத் தாய்மாரின் கடமை.

தாயார் உச்சி மோந்து கன்னம் கிள்ளிக் கொஞ்சிப் பேசி முத்தாடும்போது, குழந்தை புன்னகை புரிந்து தன் மகிழ்ச்சியை வெளியிடுகிறது. "அம்மம்மா" "அப்பப்பா" "தாத்தாத்தா-" "பாப்பா-பா-பா" என்றெல்லாம் சின்னஞ்சிறு சொற்களையும், சொற்களின் பகுதிகளையும் எளிதாகத் தெளிவாக உச்சரித்துக் குழந்தை முகம் நோக்கிக் கொஞ்சும்போது, அந்த ஓசைகள் நமது காதில் மணியோசைகள் விழுவதுபோலத்தான் குழந்தையின் இளஞ் செவிகளில் விழுகின்றன. நாம் மணியோசையை வேறு ஓசைகளிலிருந்து பிரித்து அறிவதுபோல், குழந்தையும் கொஞ்சும் பாஷையை—முத்தாடும் மணிமொழிகளைத் தெரிந்து கொள்கிறது. இத்தகைய தாயன்பு, குழந்தை வளர்ப்புக்கும் குழந்தைப் பயிற்சிக்கும் இன்றியமையாதது. அன்புமயமான சூழ்நிலையில், அன்பு நிறைந்து ததும்பும் அழகான பகுதி இது.

தாலாட்டின் வசீகர சக்தி

இத்தகைய அன்புச் சூழலில் தாலாட்டுக்கு ஒரு முக்கியமான ஸ்தானம் உண்டு.

ஆராரோ ஆராரோ
ஆரிரா ராரிரோ
ஆராரோ ஆரிவரோ
ஆரிரா ராரிரோ

என்று தொட்டிலில் இட்ட குழந்தையைத் தாலாட்டிச் சீராட்டும்போது, குழந்தை எப்படி வசீகரிக்கப்படுகிறது! குழந்தையின் மகிழ்ச்சி இள நகையாக அரும்பாமல் முகத்திலே ஒரு அமைதியாக மலர்கின்றது.

பாட்டியோ, தாயோ, அத்தையோ, அக்காளோ தாலாட்டில் சொன்ன சொன்ன வார்த்தைகளையே திரும்பத் திரும்பச் சொல்லிக் குழந்தைக்கு மிகவும் இனிய எளிய ராகத்தில் பாடித் தொட்டிலை ஆட்டுவார்கள். இப்படிப் பாடி ஆட்டிக் கொண்டிருக்கும் போதே குழந்தையின் மகிழ்ச்சியும் அமைதி நிலையும் குழந்தையை ஸ்தூல லோகத்திலிருந்து சொப்பன லோகத்திற்குக் கொண்டுபோய் விடுகின்றன. இந்த நிலையில் குழந்தையின் முகத்திலே தெய்வீக அமைதி தவழ்கின்றது. அந்த உறக்க நிலையிலே இந்த அமைதி புன்சிரிப்பாகவும் வெளிப்படுவதுண்டு.

ஆகவே, குழந்தையோடு கொஞ்சி முத்தாடிக் கன்றுக்கு இரங்கும் கறவைப் பசுப்போல் நெஞ்சுருகி மொழி குழறிக் குழந்தைச் சிரிப்பைப் பெறுவது, தாயாருக்கு ஒரு கல்லாக்கலை! குழந்தைக் கலையின் ஆரம்ப நிலையில் இக் கல்லாக்கலையைத் தாயார் கற்றுப் பயிற்சி செய்தும் பயன் படுத்திக்கொள்ள வேண்டியதுதான். இக்கலையை ஒருவாறு சார்ந்ததுதான் தாலாட்டும். கொஞ்சும் மொழிகளையும் தாலாட்டுப் பாட்டையும் குழந்தைகள் பெரிதும் ரஸிக்கின்றன—கவிதையை ரஸிக்கும் ரஸிகர் போலே.

இனித் தாலாட்டைக் குறித்து, தனியாக அடுத்த கட்டுரையிலும் சொல்ல விரும்புகிறேன்.



சந்திரமண்டலம் என்னும் தேசத்து அரசனுக்கு வேடிக்கைகள் பார்ப்பதில் மிகவும் பிரியம். எனவே, எல்லா தேசத்து மந்திரவாதிகளையும் வரவழைத்து வேடிக்கைகள் காட்டும்படி செய்தான்.

வேடிக்கைகளை அரசனுடன் கூட இருந்து, ராஜகுமாரி புஷ்பாவதியும் கவனித்து வந்தாள். அங்கு வந்திருந்த மந்திரவாதிகளுக்குள், ஓர் இளம் மந்திரவாதியே மிகவும் அற்புதமான வேலைகளைச் செய்து காட்டினான்.

ராஜகுமாரி புஷ்பாவதி அந்த மந்திரவாதியுடன் பேச விரும்பினாள். பிறகு அந்த மந்திரவாதியை தனிமையில் அழைத்துப் புகழ்ந்து பேசினாள். சற்று நேரம் கழித்து மந்திரவாதி விடை பெற்றுச் செல்லும்பொழுது புஷ்பாவதியிடம் ஓர் மந்திரப் புத்தகத்தைக் கொடுத்து, "இதைக்கொண்டு ஒரு பொருளை மற்றொரு பொருளாக மாற்றலாம். பிறகு அதை பழைய உருவமும் அடையச் செய்யலாம். அப்படிச் செய்வதற்கு வேண்டிய மந்திரங்கள் இதில் எழுதப்பட்டிருக்கின்றன" என்று சொன்னான்.

ராஜகுமாரியும் அந்தப் புத்தகத்தின் உதவியால் சிங்கப் படத்தை நிஜச் சிங்கமாக மாற்றினாள். தரையை தண்ணீராக மாற்றினாள். சிங்கம் அரசனை நோக்கிப் பாய்ந்து வந்தது. அரசன் பயந்து விட்டான்.

அப்பொழுது ராஜகுமாரி அரசன் முன் வந்து "இதோ உள்ள இப்புத்தகத்தின் உதவியால் தான் இப்படியெல்லாம் செய்தேன் நானும் இப்புத்தகமும் இப்பொழுது மாறுகிறோம்" என்று சொல்லி புத்தகத்தை ஒரு மரமாகவும், தன்னை ஓர் கிளியாகவும் மாற்றிகொண்டாள்.

அரசன் தன் புதல்வி கிளியாக மாறியதைக் குறித்து வருந்தினான். புத்தகம் இருந்தாலல்லவா பழயபடி மாற்ற முடியும்? அதுதான் மரமாகி விட்டதே! மறுநாள் அரசன், யார் தன் பெண்ணைக் கிளி ரூபத்திலிருந்து மாற்றி அரசகுமாரியாக மாற்றுகிறார்களோ, அவருக்கு தன் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுப்பதாக பறைசாற்றினான். பல மந்திரவாதிகள் வந்தும் பயன்படவில்லை. கடைசியில் ஓர் கிழவன் வந்து கிளியை புஷ்பாவதியாக மாற்றினான்.

கிழவன் ராஜகுமாரியைக் கல்யாணம் செய்து கொடுக்கும்படி கேட்டான். அரசனும் ராஜகுமாரியும் கவலையடைந்தனர். கிழவனையா மணப்பது? மந்திரவாதி அப்பொழுது தன் தாடியையும்,

மீசையையும் எடுத்துவிட்டு வாலிபனானான். என்ன ஆச்சர்யம்! அவன் முன்பு ராஜகுமாரிக்குப் புத்தகம் கொடுத்தவன் அல்லவா?

உடனே அரசன் மகிழ்ச்சியடைந்து புஷ்பாவதியை அவனுக்குக் கல்யாணம் செய்துகொடுத்தான். கல்யாணமும் வெகு விமரிசையாக நடந்தது. பிறகு மந்திரவாதி மரத்தை புஸ்தகமாக மாற்றிதானே வைத்துக் கொண்டு விட்டான். புஸ்தகத்தை பிறகு புஷ்பாவதிக்குக் கொடுப்பதேயில்லை.

ராஜாஜிக்கு அமோக வரவேற்பு

திருச்சி விஜயத்தின்போது ராஜாஜிக்குப் பூர்ண கும்பத்தோடு வரவேற்பளித்தார்கள்.



அமெரிக்காவில் தயாராகியுள்ள புதுவகை யுத்த விமானத்துக்குத் "தண்டர்ஜெட்" என்று பெயர். மணிக்கு 600 மைல் வேகம் போகும்! $37\frac{1}{4}$ அடி நீளமும் 36 அடி அகலமும் உள்ள இவ்விமானம் 'ஜெட்' விசை முறைப்படி இயக்கப்படுகிறது.



டெல் அவீவ் என்ற போலீஸ் ஸ்டேஷன் (பாலஸ்தீனம்) பயங்கர இயக்கக் கலகக்காரர்களால் தவிடுபொடியாக்கப்பட்டது சமீபத்தில். பிரிட்டிஷ் ஸோல்ஜர்கள் சேதப் பகுதியைச் செப்பனிடும் போது எடுத்த படம்.

ஞாபகப்படுத்துகிறோம்

★

'சுதேசமித்திரன்' வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்



ஸான்பிரான்ஸிஸ்கோவில் கார்களை நிறுத்தி வைப்பதற்கான பிரச்னைக்குப் பரிகாரம் கண்டு பிடிக்கப்பட்டுளது. 5 பிளாக் நீளமுள்ள மிகப்பெரிய "கார்ஜ்" ஒன்றை நிர்மாணிக்க கட்டிட நிர்மாண நிபுணர் "பிளான்" கொடுத்திருக்கிறார். இதில் 9 மாடிகள் உண்டு. அடித்தளத்தில் ஸ்டோர்கள். மேல் பகுதிகளில் வண்டிகளை நிறுத்தலாம். இங்கு 15,000 கார்களை நிறுத்தலாம். இதற்காகும் செலவு 19,125,000 டாலர்கள்.



இது ஒரு நூதன விமானம். 'ஜெட்' விசையில் இயங்குவதுதான் இதுவும். "ரோல்ஸ் ராய்ஸ்" என்ஜின் இதில் பொருத்தப்பட்டுளது. 51,000 அடி உயரம் பறக்கும் சக்திகொண்டது. இதுபோன்ற விமானங்கள் தயாரிக்கவோ, இறக்குமதி செய்யவோ யு. எஸ்., பிரான்ஸ், ரஷ்யா, சீனா, ஆஸ்திரேலியா, முதலிய நாடுகளுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டுளது.

வரகூர் வேங்கடதாஸன்

52

'சிறைப்பட்டான்'

காஞ்சி நகர் அரச வீதியில் கடுகி வந்து கொண்டிருந்தான் ஒரு குதிரை வீரன்: வாயு வேகமாகக் கடுகிவந்தது அவன் குதிரை. அரண்மனை வாயிலைக் கடந்ததுதான் தாமதம்—குதிரையிலிருந்த வீரன் பாய்ந்து குதித்தான். அரண்மனைக்குள் மின்னலெனச் சென்று மறைந்தான். ஆக்ஞை கூறிக் காவலரைக் கடந்து ஓடினான்.

மந்திராலோசனை மண்டபத்தில் துணைவர்களுடன் வீற்றிருந்த நந்திவர்மனுக்கு முன் போய் நின்றான். தலைவணங்கியவனைத் தடுமாற்றத்துடன் கூறினான்.

"ராஜ ராஜஸ்ரீ நந்திவர்ம தேவர் திரு முன்னர் மகா சாமந்தாதிபதி உதயசந்திரன் அடி பணிந்து தெரிவித்துக்கொண்ட விஞ்ஞாபனம் :—" என்று அவன் கூறும்போது பதற்றத்துடன் எழுந்து நின்றான் நந்திவர்மன்.

"உதய சந்திரனின் விஞ்ஞாபனம் என்னவென்பதை விரைவில் சொல்!...நீ போர்க்களத்திலிருந்து வருகிறாயா?" என்று கேட்டான் நந்திவர்மன்.

"பிரபுதேவ!...போர்க்களத்திலிருந்துதான் நான் அனுப்பப்பட்டேன்!—'பாண்டிய மன்னன் படைகளுடன் முன்னேறிவிட்டதால் விரைவில் புறப்பட்டு வருக" என்று மகா சாமந்தாதிபதி விஞ்ஞாபனம் செய்துகொண்டார்"

அநிருத்தரும் எழுந்து நின்றார் வியப்புடன். ஹிரண்யவர்மரும் சிவமாறப் பிரபுவும் முகம் சிவந்து எழுந்தார்கள்.

"புறப்படுங்கள்!......காவல!... நாங்கள் வருவதாக முன் சென்று கூறிவிடு!..." என்றார் அநிருத்தர் வீரனை நோக்கி. கடுகினான் வீரன்,

நந்திவர்மன் வெடி நகை செய்தான்.

"இனி நாம் யோசித்துப் பயனில்லையே!...புறப்பட்டுச்சென்று வெற்றியோ தோல்வியோ முடிசெய்தாக வேண்டியதுதான்." என்று கூறி விரைந்து நடந்தான், அநிருத்தர் முதலிய மூவரும் பின் தொடர்ந்தார்கள்,

வாயில் மாடத்தில் சித்தமாக நின்ற தேர்... நால்வரும் தனித் தனியே ஏறிக்கொண்டார்கள்.

தேர்கள் போர்க்களம் நோக்கிக் கடுகின.

போர்க்களத்தில் பேராரவாரச் சப்தத்தைச் செவிகளால் கேட்டவாறே தேரில் அமர்ந்து சென்றார்கள்.

வலக்கண்ணும் இடக்கண்ணும் மாறி மாறித் துடித்தன நந்திவர்மனுக்கு.

மதிள் வாயிலைக் கடந்தன தேர்கள். போர் வீரர்களின் கூட்டங்களைப் பிளந்து முன்சென்றது தேர்கள். எங்கும் போர் முழக்கம் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

பல்லவ சேனைக்கடலின் நடுவிலே போய் நின்றார்கள். தேர்களில் நின்றபடியே சுற்றுமுற்றும் பார்த்தார்கள். மனம் பதை பதைக்க நந்திவர்மன் கூறினான்:

"அநிருத்தரே,...இந்தப் போர்க் காட்சிகளைப் பார்த்தீர்களா?... பல்லவ வீரர்களின் பிணக் காட்டைத்தான் நாம் காண்கின்றோம்!...தென் மேல்புறம்...பாண்டியப் படைகள் முடுகிவிட்டனவே!...இனி தாமதிப்பது முறையல்ல!...முத்தரையன்!... தானுரவி. உதயசந்திரன், சோழ சேனாபதிகள்—இவ்வளவு பேர்களும் முன் நின்றும் இந்த அவதி ஏற்பட்டுவிட்டதே! ..அதோ!.. தானுரவியா, வருகிறான்?..."

"ஆம்!...தானுரவிதான்! அவன் வந்து தெரிவிப்பான்; இப்போதே நாம் புறப்படுவோம்!..."என்றார் அநிருத்தர்.

விரைந்து வந்த குதிரையிலிருந்து தானுரவி கீழே குதித்தான். நந்திவர்மனுக்கு முன் வந்தான். அவன் முகமும் மார்பகமும் செங்குருதிக் கறை படிந்திருந்தன.

"பிரபு!...இன்று போர் நிலை... கவலையைத் தருகின்றது. ஆனால் சளுக்கியப் படைகளைப் போருக்குத் திருப்ப வேண்டுமென்று கீர்த்திவர்மன் செய்த முயற்சி வீணாகிவிட்டது. முடிவில் கீர்த்திவர்மனே ஓடிவிட்டான் அவமானம் பொறுக்க முடியாமல். சளுக்கியப் படைகள் ராஷ்டிரகூடரை எதிர்க்கப் போய்விட்டதால் பாண்டியன் பலம் குறைந்து தோல்வியடைவான் என்று எண்ணினேன். எங்கிருந்தோ ஈசல் புறப்பட்டதுபோல் பாண்டிய நாட்டிலிருந்து மேலும் படைகள் வந்துவிட்டன கங்க நாட்டுப்படைகளையும் நம்மீது ஏவிவிட்டார்கள் கங்கராஜ குமாரர்கள். தென் மேல்புறத்தில் உதயசந்திரனும், முத்தரையனும் மகத்தான சாகஸங்கள் செய்தும் பயனில்லை. பாண்டியப் படைகள் உள் புகுந்து விட்டன! நம் படைகள் இப்போது பாண்டியப் படைகளைப் பின்

சென்று வளைத்துக்கொண்டுள்ளன. ஆனால் மேலும் பாண்டியப் படைகள் தொடர்ந்து பின் வருகின்றன. இதை எப்படியேனும் எதிர்த்து அழிப்பது என்றே நான் சூழ்ச்சியில் முனைந்துள்ளேன்...'' என்று தானுரவி மந்தகஜத்தின் கம்பீரக் குரலிலே கூறினான்—

கண்கள் சிவக்கப் பார்த்தான் நந்திவர்மன். பதற்றத்துடன் கேட்டான்.

''சூழ்ச்சியா? இனி என்ன சூழ்ச்சி?

''இங்குள்ள நிலைப்படைகளைக் கொண்டு பாண்டியப் படைகளை ஊடறுத்து பாண்டியன் இருக்கும் பகுதியை முற்றுகையிட்டு விட்டால் -'' என்றான் ஒற்றர் தலைவன் தானுரவி.

அநிருத்தர் குறுக்கிட்டுச் சொன்னார்.

''தானுரவி! உன் யோசனை இருக்கட்டும்; இப்போது பாண்டியன் படைகளின் முன்பகுதியில் இருக்கிறானா? பின்பகுதியில் இருக்கிறானா?''

''ஆற்றொழுக்காக—சட்டியெனப் படைகள் நம் நகர்க்குள் புகுந்திருக்கின்றன. நடுப்படையிலேதான் பாண்டியன் இருக்கிறான்!...கங்கராஜகுமாரர்கள் பின்படையில் இருக்கிறார்கள்; சித்திரமாயன் முன்படையில் வெறியுடன் போராடுகின்றான்...'' என்று தானுரவி சொன்னான்.

''அப்படியானால் விக்கிரமாதித்தனின் மகன் கீர்த்திவர்மன்...நாடு திரும்பிவிட்டானா உண்மையில்!'' என்றார் அநிருத்தர்.

''ஆம்!...அவன் தந்தை சென்ற சிறிது நாழிகைக்கெல்லாம்... படைகளிடம் ஏமாற்றம் அடைந்ததால் அவமானமடைந்து தனியே ஓடிவிட்டான்!...என் ஒற்றர்கள் தெரிந்துவந்து சொன்னார்கள... அவனைப்பற்றி இனிக் கவலையில்லை!...''

''தானுரவி!...உன் யோசனையை நான் ஏற்றுக்கொள்கிறேன் படைகளை நடத்து...' என்றான் நந்திவர்மன். மறுகணமே தானுரவி குதிரை மீது தாவி அமர்ந்தான்.

''நாமும் புறப்படுவோம்!...'' என்றான் நந்திவர்மன்.

'நான், சிவமாறப்பிரபு— இருவரும் முன்செல்கிறோம். நீ பின்னே வருக!...ஹிரண்யவர்மர் உனக்குப் பின் வந்துகொண்டிருப்பார்!...'' என்றார் அநிருத்தர்.

சங்கநாதம் செய்து நிலைப்படைகளை இயக்கினான் தானுரவி! அலை கிளர்ந்தாற்போல் மேலெழுந்து சென்றன பல்லவ சைன்யம். அநிருத்தரும் சிவமாறப் பிரபுவும் பின்தொடர்ந்தார்கள் தேர்களில் ஊர்ந்து.

மேலைத்திசையிலிருந்து பாய்ந்து கிழக்கு நோக்கிப் புகும் பாண்டியப்படைகள் மீதே பல்லவப்படைகள் மோதித் தாக்கின. கிழக்கிலும் தென்கிழக்கிலும், தென்மேற்கிலும் பல்லவப்படைகள் பின்னடைந்த வண்ணம் தாக்கிக்கொண்டிருந்தன; முத்தரையன் தென்மேற்கிலும், உதயசந்திரன் கிழக்கிலும் சோழசேனாபதியர் தென்மேற்கிலும் நிலைத்து நின்று பொருது கொண்டிருந்தார்கள். தானுரவியும் நந்திவர்மன் முதலியவர்களுமாக தனியே கடுகிச்சென்று பாண்டியப்படைகளைப் பிளந்தார்கள்.

பல்லவ நந்திவர்மனும், அநிருத்தரும் போர்க்களம் புகுந்துவிட்டதைக் கண்ட பல்லவப்படையினர் மகத்தான ஆரவாரம் செய்தார்கள். பல்லவ வேந்தன் போர்க்களம் புகுந்து விட்டதை உணர்ந்தும் 'கொட்டை' என்ற முரசும் அதிர்ந்தது. மகா சாமந்தாதிபதியான உதயசந்திரனும் ஸர்வாதிகாரியான முத்தரையனும் ருத்ரபதி முதலான சோழ சேனாபதிகளும் போர் புரிந்த வண்ணம் பொம்மல் கொண்டார்கள். நந்திவர்மன் போர்முகம் புகுந்ததால் உண்டான புதிய உணர்ச்சியுடன் பல்லவப் படைவீரர் பொருதார்கள்.

பகைவர்களான பாண்டிய வீரர்களும் புது வீறுகொண்டு தாக்கினார்கள். பாண்டியப் படைகளின் நடுப்படையிலே புகுந்தான் நந்திவர்மன். தானுரவியின் நிலைப்படையானது பாண்டியனின் நிலைக்களத்தை வட்டமிட்டுச் சூழ்ந்து சுழன்றது. நந்திவர்மன் மெய்மறந்து படைகளை ஊக்கும் முயற்சியில் ஈடுபட்டான். பல்லவவேந்தன் அகப்பட்டுக்கொள்வானோ என்ற அச்சத்தால் அநிருத்தரும் சிவமாறப் பிரபுவும் சூழ்ந்து நின்று காத்துச் சென்றார்கள்.

'முடிவான போர் என்ற நிலை இரு திறத்துப் படைகளுக்கும் ஏற்பட்டு, கொடூரம் நிறைந்த போராட்டம் விளைந்து விட்டது.

இந்தப் பெரும், போராட்டத்தைக் கண்ட எந்தக் கவிஞனும் சொல் சித்திரங்களால் இந்தப் போர்க் காட்சிகளைச் சித்திரிக்காமல் இருக்க முடியாது அல்லவா?

''வீரரும் குதிரைகளும் யானைகளும் கணக்கற்றவை திரிந்ததால் எழுந்த தூளி சூரியனை மறைத்தது: அவன் ஒளி சந்திரனது கோட்டைப்போல மங்கிவிட்டது. முரசொலி இடியைப் போல அச்சத்தை உண்டாக்கியது. உறையிலிருந்து உருவின வாள்கள் மின்னல்போல் கண்களைப் பறித்தன. மேகங்களைப்போன்ற யானைகள் அசைந்து சென்றன. அகாலத்திலே மழை வந்தாற்போன்ற காட்சி தோன்றியது. கடல் அலைகளைப் போன்ற குதிரைக் கூட்டங்களுக்கு நடுவிலே யானைகள் குழறிக் கலந்தன. கடல் நீரின் அடியில் கோர ஜந்துக்கள் புறப்படும்போது உண்டாகும் சுழலைப்போல் படைகள் சுழன்றன, சாகரத்தில் சங்குகள் புறப்பட்டாற்போல வீரர்கள் சங்குகளை ஊதினார்கள். கொடி மரங்களைக் காண்டா மிருகம் முறித்தோடுவதுபோல் வாள்களும் கேடகங்களும் அலைந்து சிதறின, வில்வீரர்கள் அசோக, நாக, புன்னாக, திலக மரங்கள் நிறைந்த காட்டைப்போல் நின்றார்கள். வீரர்கள் வில்லை வளைத்து அம்பை விடும்போது, காட்டில் காற்றுத் தடை பட்டாற்போல பேரொலி உண்டாயிற்று. வாள்கள் ஒன்றுடன் ஒன்று சிக்கியதால் அசையாமல் நின்றார்கள் குதிரை வீரர்கள். தந்தங்களால் குத்திக்கொண்டு நிலையாக நின்றன யானைகள், தண்டாயுதங்கள் ஒன்றோடொன்று மோதி நின்றன. ரத்தமும். மதநீரும் கலந்து தரையில மஞ்சள் பூசினாற் போல் ஆயிற்று. அங்கங்கள் அற்றும், இற்றும் சிதறின, இருதிறத்தாரும் முன்னும்பின்னும் ஓடிகளைத்தார்கள். நதியாகிய குருதியின் மேல் பாலங்கள் போல்நின்ற யானைகளின் மேல் வீரர் அமர்ந்திருப்பது, சீதேவி சந்நிதகம் என்கிற ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டு முன்னும் பின்னும் ஆடினாள். அடிபட்ட வீரர் இறக்காதவர்போல் கையில் வாளை ஏந்தி உதடு உதறி கண் சிவந்து நின்றார்கள்.

(தொடரும்)

மரண வித்தை

கி. பஞ்சாப கேசன்

''ஆறிலும் சாவு நூறிலும் சாவு, தம்பி......''

''ஆமாம், அண்ணே! கரணம் தப்பினா மரணந்தானே.........''

கழைக்கூத்தாடி பிரம்மாண்டமான உயரத்தில் குழந்தையுடன் தொங்கிக்கொண்டிருந்தான். ஒதுங்கியிருந்த திண்ணையருகில் இன்னும் இரு குரல்கள் கேட்டன.

''அம்மா! அத்தனை உசரத்திலே ஆடறானே! அந்தப் பாப்பா விழுந்துட்டதுனா ?......''

''அது எப்படிடா விழும்? எல்லாம் பழக்கம்டா. நோக்கு இப்போ புரியாது. வேடிக்கையைப் பார்டா, கண்ணே! பயமா இருந்தா உள்ளே போயிடு!''

இன்னும் இரு குரல்கள்:

''வேய்! ரொம்பத்தான் ரசிக்கிறீரே...அவனா செத்துப்போக மாட்டான்...பாட்டன், பூட்டன் பண்ணின வித்தைகளையெல்லாம் விட சூரத்தனமானதுகளை இவன் செய்வான்......இப்போ எல்லாம் முடிஞ்சப்பறம் 'துட்டு' கேட்க வருவானே! கம்பிதானே நீட்டணும்?''......

''சே சே! அப்படிச் செய்யலாமா? அவன் விழுந்துட்டா கூடக் கொஞ்ச நாழி இருந்து பார்க்கமாட்டோமா? ஏதோ, காலணா போட்டாத்தான் என்னவே முழுகிடும்?......''

இப்படி மரணத்தின் கோரம் இடைப்புகாத வேடிக்கையைக் கண் முன்னால் ரசித்தார்கள். மரணம் சம்பவித்தாலும் அவர்கள் அந்த வேடிக்கையையும் ரசிக்கத் தயாராயிருந்தார்கள். மரணம் கழைக்கூத்தாடியின் ஒரு வித்தை என்றே மதித்துவிட்டார்கள் அவர்கள்.

கழைக்கூத்தாடியின் அந்த வித்தை முடிந்தது. குழந்தையுடன் பத்திரமாகக் கீழே வந்து சேர்ந்தான். இறங்கியவுடன் அந்த மூன்று வயசுக் குழந்தை ஆத்மப் பிரதட்சிணம் செய்துகொண்டே எல்லாருக்கும் தண்டனிட்டது. பிறகு தன்னுடைய சின்னஞ் சிறு வாய் திறந்து அதன் பாஷையில்லாத தமிழ்ச் சொற்களை உதிர்த்தது. அந்த இரண்டு மூன்று சொற்களில் மனித மனோபாவத்தையே இடித்துக் கேலி செய்துவிட்டது அது. கழைக்கூத்தாடி சொல்லிக்கொடுத்ததுதான், ஆனால் அவனுக்கு வாய்த்த அந்த 'இன்டர்பிரடரின்' சொற்கள் ஒவ்வொருவருடைய உள்ளத்தையும் ஊடுருவியிருக்கத்தான் வேண்டும். 'எம்புட்டுச் சிரமம் பாருங்க!...... உங்களுக்கு வேடிக்கை!......சாமிமார்களே! காலணா போடுங்க!...'' —அவ்வளவேதான்.

இந்தச் சமயத்தில் கூட்டத்தில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. ஒருவருக்கொருவர் முகத்தில் விசித்திரச் சுழிவுகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். காரணம் அவனுடைய அடுத்த வித்தையும் கடைசியானதும்தான்!

'சாமிமார்களே!...உசிரை கையிலே புடிச்சுக்கிட்டுச் செய்யற வித்தையில்லே!...உசிரு போய் உசிரு வர் வித்தையிது!......என் உசிரு அல்ல......என் உசிரா இருந்தா காத்திலே ஊதிப்போடுவேன்...இந்த உலகத்திலே வாளறதுக்கு உசிரு வேறே வேணுமா!... துரைமார்களே! இந்தப் பச்சைக் குளந்தையினுடைய உசிரு......'' என்று சொல்லிச் சிறிது நிறுத்தினான் கழைக்கூத்தாடி.

இன்னொரு கோடியில் உட்கார்ந்துகொண்டு தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்தவன், ஆமாம்...... என்று எதிரொலி செய்தான்.

யார் உசிரு...? என்றான் கழைக்கூத்தாடி மறுபடியும்.

குளந்தை உசிரு! என்றான் தம்பட்டம் அடிப்பவன்.

'எந்தக் குளந்தை?...இந்தக் கூட்டத்திலே இருக்கிற எந்த மவராசன் குளந்தை?''

''இல்லை''

''யார் குளந்தை?''

''நம்ம குளந்தை''

''ஆமாம்...நம்ம குளந்தை! அதன் உசிரு போனா மவராசன்களுக்கென்ன...வவுத்தெக் களுவ வாங்க தர்மராசங்க!...ஆமாம்... சந்தேகமில்லே...போடு தம்பட்டம்!...''

''டம டம டம டம டம டம...''

ஊரே கூடியிருந்த அக்கிரகாரத்தில் கழைக்கூத்தாடியின் குரலையும் தம்பட்டத்தின் பேயொலியையும் தவிர வேறு ஒலி இல்லை. புழுக்கம் நிறைந்த மத்தியான வேளையாயிருந்தாலும் வேடிக்கை பார்க்கும் மனோபாவம் இந்திரியங்கள்படும் வெளி வேதனைகளைச் சுலபமாக மறந்துவிடுகிறது. உயிர் போய் உயிர் வருகிற விஷயம் கழைக்கூத்தாடியின் சொற்களில் பாய்ந்து எல்லார் உள்ளங்களிலும் நிரம்பிவிட்டது அடுத்தபடியாக அதைச் செயலில் காட்ட அவன்

முற்படப் போவதை ரசிக்க வேண்டியதுதான் பாக்கி.

மறுபடியும் குரல் கொடுத்தான் கழைக்கூத்தாடி.

"...பவானி சாட்சியாச் சொல்றேன், இந்தக் கூட்டத்திலே எந்த மந்திரக்காரன் இருந்தாலும் அவன் சொல்லிப்போடறும்... ஐயா!...நான் பெத்த மவள்!... உங்க கண்ணெதிரே கழுத்தை வெட்டப் போறேன்...பார்க்கப் போறீங்க, தர்மராசா!...மந்திரக்காரன் யாராச்சும் இருந்தா அவன் எதிரே வந்துடணும்!...உசிர் வரதைத் தடுத்துப் போடுவான்!... ஆனால் என்னிடம் மந்திரமில்லே, மாயமில்லே!...எல்லாம் பவானி யாத்தா அருள்!...'என்று கூட்டத்தை ஒரு தரம் உள்ளடக்கிச் சுற்றிக்கொண்டே கூறினன். அவன் சந்தேகம் அகன்று விட்டது. கூட்டத்தில் வேறொரு மந்திரக்காரனும் இல்லை.

அவனுக்கு மந்திரம்தெரியுமோ தெரியாதோ, சாவை அவன் ஆட்சிக்கு உட்படுத்தியிருப்பதை எல்லாரும் நிதர்சனமாகக்காண இருந்தார்கள்....

தம்பட்டத்தின் ஒலி அதிகரித்துக்கொண்டிருந்தது. கழைக்கூத்தாடியிடம் இருக்கவேண்டிய சாமான்கள் அத்தனையும் அங்கே அவன் பரப்பியிருந்தான்—மண்டையோடுகள், மிருக எலும்புகள் உள்பட. பலவித வர்ணத் துணிகள் சேர்த்துத் தைக்கப்பட்ட ஒரு விரிப்பின்மேல் குழந்தையைக் கிடத்தினுன். அப்போது கூட்டத்தைப் பிளந்து கொண்டு, "...ரமாய்!...ரமாய்..." என்று ஈனக்குரலுடன் கழைக்கூத்தாடியின் மனைவி ஓடி வந்து, குழந்தையை 'உச்'சென்று முத்தம் இட்டாள். கண்ணீர்விட்டாள்.

"டமடம டமடம..."

"அடேய், பொட்டி மவனே! கொஞ்சம் நிறுத்தடா!...சாமிமார்களே!...பாருங்க!...தாய் அளுள்...குளந்தை உசிரு தாய் உசிர ...இருக்குது!.......இவளை இப்படி வெச்சிருந்தால்........... சும்மாவே போவமாட்டாள்...... டேய், கஜான்!......எங்கேடா சாட்டை?" என்று உண்மையான நடிப்பின் உச்சஸ்தானத்திலே—அப்படித்தானே நாம் நினைக்க வேண்டும்!—நின்முன்.

சாட்டை வந்தது. அவளை விறினுன்! அவள் அலறிக்கொண்டு மறுபடியும் தெருக் கோடிக்கு ஓடிவிட்டாள். அவன் நடத்தப் போகிற மரண நாடகத்துக்கு—அந்த மரண வித்தைக்கு—எப்படிப்பட்ட முஸ்தீப்புகள் உணர்ச்சி பாவங்கள் காட்டினுன்!

இன்னொரு விரிப்பை எடுத்துக் குழந்தையைப் போர்த்தினுன். கழைக் கூத்தாடியின் குரலில் குடிகொண்டிருந்த பயங்கர ஒலி—வெளிப்புறத்தில் கஜான் கிளப்பிக்கொண்டிருந்த தம்பட்டத்தின் பயங்கர ஒலி—அருகில் இரண்டு மூன்று கூடைகளுக்குள் இருந்த கரு நாகங்கள் மூடியைத் தூக்கித் தூக்கி உடம்பை நெளித்து விட்டுக்கொண்டிருந்த காட்சி—எல்லாம் சேர்ந்துகொண்டு, மரணம் என்பது சாமான்யப்பட்டதல்ல—வெகுவெகு பயங்கரமானது என்று உணர்வைத்தந்து கொண்டிருந்தன.



அவன் குரல் கேட்டது.

"சாவைப்பார்த்துப் பயப்படறவங்க; கோளை மனசுடையவங்க; கர்ப்பிணிங்க....... எல்லாரும் உசார்! பக்கத்திலிருக்கிறவங்க உசாரா பார்த்துக்குங்க..... மயக்கம் போடப் போவுது!... அடிடா, கஜான்!...... அரிவாள் எடுக்கணுமா?..."

"ஆமாம்..."

'இட்டியாச்சா?'

"நல்லா..."

"பவானி யாத்தா காப்பா..."

"ஆமாம்..."

"டேய் கஜான்!"

"என்ன, அண்ணே?...'

"துட்டு வேணுமா?"

"வேணும்..."

"போடா மரிவாதை கெட்ட பயலே! என்னடா வேணும் பின்னே?"

"குளந்தை வேணும்..."

"துட்டு?"...

"அதும் வேணும்!..."

"பாருங்க எசமாமார்களே! இந்தப் பொட்டிக்குத் துட்டும் வேணுமாம், உசிரும் வேணுமாம்!........ எல்லாம் பவானியாத்தா அருள்!..' என்று சொல்லிவிட்டு மந்திரக் கோலாகவும் புல்லாங்குழலாகவும் உபயோகித்து வந்த குழலை எடுத்து சுருள் சுருளாகக் கொஞ்ச நேரம் வாசித்தான்.

கூட்டத்திலிருந்த ஒவ்வொருவரின் உள்ளமும் புல்லரித்துக் கொண்டிருந்தது; கழைக்கூத்தாடி நேரம் செய்தது அவர்களுக்குக் கசப்ப உண்டுபண்ணினுலும், அவன் செய்த ஆர்ப்பாட்டத்தை அவர்களால் தவிர்க்கமுடியவில்லை. குழந்தையின் சாவு கொடுக்கப் போகும் வேடிக்கையும், அதன் உயிர் வந்து அதைப் பார்க்கப் போகிற வேடிக்கையும், அவர்களை உலுப்பிக்கொண்டிருந்தன.

பிறகு கொஞ்ச நேரத்துக்கு வார்த்தை ஜாலங்கள் செய்தான் கழைக்கூத்தாடி...

எல்லோருடைய கண்களும் பார்த்துக்கொண்டிருந்தன. 'நெஞ்சம்' கொண்ட அந்தத் தந்தை அரிவாளுடன் வலிய கைகளை விரிப்புக்குள் குழந்தையின் கழுத்துப் பககம் செலுத்தினுன்...எல்லோரும், பேய் நிம்மதியுடன் பேச்சு மூச்சற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்...

"கிரீச்..."

ரொம்ப மெல்லிய சப்தம்தான். தம்பட்ட ஒலி நிறுத்தப்பட்டதால் அது ரொம்ப நன்ருகக் கேட்டது.

கூட்டத்தில் இரண்டொருவர் 'ஹா' என்று கத்தி விட்டார்கள்... தேகத்தைத் தூக்கிப்போட்டது அநேகருக்கு...பக்திமான்கள், "என்ன, பிழைப்பு பகவானே!' என்ருர்கள்...பெண்கள், 'குழந்தை நல்லபடியாகணுமே........." என்று அங்கலாய்த்தார்கள்...... விரிப்பைத் திறக்காமல் கையை எடுத்தான் கழைக்கூத்தாடி.

ரத்தம்! உடம்பில் ஊறும் ரத்தத்தைத்தான் கழைக்கூத்தாடியின் நடுங்காத கைகளில் நடுங்கும் தேகத்துடனும், உள்ளத்துடனும் எல்லாரும் பார்த்தார்கள்.

உச்சென்று எச்சிலை உள்ளுக்கு இழுத்தான் கழைக்கூத்தாடி. குழந்தையின் பச்சை ரத்தம் அவன் முழங்கை அளவுக்குத் தோய்ந்திருந்தது. முகத்தில் அசாதாரணமான புன்னகை பளிரிட்டது.

"செத்தது மவராசங்களே!... தலை வேறு, முண்டம் வேருக்கிப் போட்டேன்...டேய், கஜான்!... ஓடிவந்து கையை உள்ளே விட்டுப் பார்டா!...

கஜான் ஓடி வந்து கழைக்கூத்தாடி சொன்னபடிக்குச் செய்தான்...கைகளை வெளியில் எடுத்த போது அவைகளிலும் ரத்தம்; ஆனல் முகத்தில் சாந்தமான புன்னகையின் பின்னல்!

"என்னடா கஜான்?"

"போச்சு"

"என்ன போச்சு?

"குளந்தை! நம்ம ரமாயி!"

"இந்த ஐயாமார்களுக்குத் திறந்து காட்டுடா!

கஜான் கொஞ்ச நேரத்துக்கு நகரவில்லை. அந்தக் காட்சியை அவர்கள் பார்க்க விரும்பவில்லை என்று ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. ஆனல் 'நம்பிக்கை' விஷயத்தில் நம் ஜனங்களின் மனோபாவத்தை கழைக்கூத்தாடி அறியமாட்டானு? அதனல் கஜான், ஒரு க்ஷணம் விரிப்பைத் திறந்து ரமாயியின் நிலையை எல்லாருக்கும் காட்டினுன்.

பார்த்தது ஒரு க்ஷணம்தான். யுகச் சித்திரம் எல்லார் மனசுகளிலும் பொறிந்து விட்டது, கழுத்தில் பாதி இறங்கியிருந்த அரிவாள், ரமாயின் தளிர்க்கன்னங்களில் வழிந்து உறைந்துபோக எத்தனித்துக்கொண்டிருந்த செங்குருதி, மூடியிருந்த இமை நுனியில் குருதியுடன் கலந்து கருமை ஏறிப் போயிருந்த தூசி, கூந்தலில் மயிர்க்கொத்துகளுடன் இழைந்து 'குபுகுபு' வென்று பொங்கி விளையாடிக்கொண்டிருந்த ரத்த வோட்டம்-இவை எல்லாவற்றிற்கும் மேலாக மனிதன் சிருஷ்டிசெய்த கொலை—மரணக் காட்சி—!...தத்ரூபமாக எல்லாரும் பார்த்தார்கள்......

"கஜான்......"

"என்ன?......"

"கூப்பிடுடா!......"

'ரமாய்! ரமாயீ! ரமாயீ!......"

"சாமிமார்களே!......குளந்தை பொளெச்சு எளுந்திருந்தா உங்க மனசுக்குச் சந்தோசம்; என் வவுறுக்கு ஒரு வாய் அன்னம்...டேய், கஜான்!......"

கஜான் புரிந்து கொண்டு தம்பட்டத்தை எடுத்து வைத்துக்கொண்டான். "டம டம டம டம......"

நீரைத் தெளித்து இன்னும் என்னவெல்லாமோ செய்து விரிப்பை எடுத்தான் கழைக்கூத்தாடி. ரமாயி துள்ளி எழுந்தாள்! கழுத்தில் ரத்தக் கரையும் கன்னத்தில் வழிந்த செங்குருதியும் கையில் அவளே பிடித்திருந்த அரிவாளும் இருந்தன.

"டம டம டம டம டம டம..."

மரண வித்தையுடன் அன்றையத் தெருக்கூத்து முடிந்தது.

மனிதனின் வாழ்க்கைக்குக் கடைசிக்கோடு போடும் மரணத்துக்கு அப்பாலும், புது நிலம் சிருஷ்டித்த பெருமிதம் கழைக்கூத்தாடிக்கு இருக்க நியாயம் உண்டல்லவா?

அன்றைக்கு அவனுக்கு நல்ல வரும்படி. துட்டு கொடுக்கக் கைகடிக்கப் பெற்றவர் கூட, தாராளமாக மூன்று ரூபாய் கொடுத்தார், ரமாயியின் பக்கம் ஒரு இரக்கப் பார்வையை விட்டெறிந்து விட்டு எல்லாரும் போன பிறகு பீடி குடித்துக்கொண்டு மரத்தடியில் உட்கார்ந்திருந்த அந்தக் கலைஞனை—கழைக்கூத்தாடியை அணுகினேன்.

"வாங்க சாமி...' என்று புன்முறுவலோடு வரவேற்ருன்.

'உன்னிடம் ஒரு சந்தேகம் கேட்கத்தான் வந்தேனப்பா!... யாராவது ஒரு மந்திரக்காரன் கூட்டத்திலே இருந்தா முன்னலே வந்துவிட வேண்டும் என்ருயே, அது ஏன்? சாவைக்கூட உன் விரல் நுனியில் வைத்து ஆட்டுகிருயே, ஒரு பயலுக்கு நீ ஏன் பயப்படவேண்டும்?... என்றேன்.

அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

"அதுவா? அது பெரிய கதையாச்சுங்களே!...நீங்க மந்திரக்காரருங்களா?...

'இல்லையப்பா! சும்மா சொல்லு!

"சுருக்கமா சொல்லிப் போடறேங்க. முன்னே இந்த மாதிரித்தான் கொரட்டூரிலே தெரு வித்தை காண்பிச்சிட்டிருக்கையிலே, இந்தக் கடைசியையும் காண்பிச்சேன். அப்போ, குளந்தையை அறுத்துப் போட்டப்பெற, என் திராணி யெல்லாம் உபயோகிச்சேன். குளந்தை நேராகல்லே..."

"அடாடா..."

"கேளுங்க அதைரியப்படாமெ! உடனே தெரிஞ்சு போச்சு, கூட்

டத்திலே இன்னொரு பய இருந்திக்கிட்டு எதிர் மந்திரம் போட்டிருக்கான்னுட்டு! அவனைச்சவாலுக்குக் கூப்பிட்டேன்! முரட்டு ஆசாமியொருத்தன் முன்னுக்கு வந்தான்.

'ஏ மவராசா! குளந்தையை விடு விச்சுப் போடு! நாளைக்கு இங்கேயே பந்தயம் போடலாம்; யார் ஜெலிப்பாங்க பாக்கலாம்'ன்னேன். உசிரைக் கொடுத்தான் கேளுங்க........"

"கேட்கிறேனே......"

"அடுத்த நாள் ரெண்டு பேர் சம்மதப்படி, பத்து படி வைச்சு உசரத்திலே ஒரு குடம் வைச்சோம். குடத்து மேலே தேங்காய் வைச்சோம். படியெல்லாம் ஏறி, அவன் கொடுத்த கத்தியால் தேங்காயைத் தொட்டாப் போதும்னு......"

"தொட்டயா ?"

"கேளுங்க! இதென்ன பிரமாதன்னுட்டு ஏற ஆரம்பிச்சேன்! நாலு படி. கிடு கிடுன்னு ஏறிட்டேன். ஐஞ்சாவது படியிலே கொஞ்சம் ஆட்டம் குடுத்தது. ஆருவது படியில் நின்னுபிட்டேன்... ஏளாவது படியில் காலை வைச்சேனோல்லியோ, என் புத்தியை அறுத்துமாதிரி இருந்துதுங்க! எட்டாவது படியில் காலை வைச்சதுதான் தெரியும்...அப்படியே மல்லாக்காய் விளுந்திட்டேன்..."

அடப் பாவி! அப்புறம் என்ன ஆச்சு?

ஆவுறது என்னங்க?...நான் செத்துப்போட்டேன்னு நினைச்சுக்கிட்டாளாம் பொஞ்சாதி...ஆனா அவன் சொன்னானும், ஒரு வாரத்திலே முளிச்சுக்கிடுவேன்னு. அப்படியே ஒரு வாரம் களிச்சு முளிச்சேன்... என்னையே சாக வைச்சு, பொளைக்க வைச்சுட்டான். அவன் பெரிய ஆளுங்க......

அப்புறம்?

அதனாலேதான் நான் முதலிலேயே கேட்டுக்கிடறது மந்திரக்காரன் இருக்கானன்னு!...... பொறவு அவன் தானுங்களே என் குரு? என்று உண்மையான ரசிகனைக் மாறி தோல்வியை மலர்ச்சியோடு வரவேற்றமாதிரியிலே அந்தக் கலைஞன் புன்னகை பூத்தான்.

சாவின் எல்லைக்கோட்டைக் கடந்து இந்த வித்தையை—வித்தையோ, கண் கட்டி வித்தையோ, எதுவோ,—தத்ரூபமாகக் காட்டுகிற இந்த இரு சிருஷ்டி கர்த்தாக்களின் தெய்விக நிலையை என் கண்கள் நேர்ப்படக் கண்டதாக எண்ணினேன்.

இதிருதயமோ, "மனிதன் கெட்டிக்காரன்தான்!" என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லியது.

—☆—

கூலெக்ஸ் உபயோகியுங்கள்
I.D.L. 78 KOOLEX TRADE MARK
கூலெக்ஸ்
உஷ்ண சமன தைலம். உஷ்ண காலத்துக்கு உகந்தது
குடும்பத்திற்கு அவசியமானவை
காஸ்மஸ் கஸ்தூரி ௦௦ — காஜன் கோரோஜனை ௦௦ — பாலக்ஸ் பேதியாக ௦௦
ஏஜெண்ட்: யூனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்

சுதாமோகன ரஞ்சிதம் (3-பாகங்கள்)
விலை ரூபா 2-8-0
மானேஜர், "சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.

வாரியர்
பிருங்காமலகாதி
தைலம்
குளிர்ச்சி மிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப் படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.
16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.
(பாக்கிங், தபால் செலவு வேறு.)
ஆர்ய வைத்தியர்
கே. எஸ். வாரியரின்
அஷ்டாங்க
ஆயுர்வேத சாலா
தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம்: 1936)

ஸையண்டிபிக் தங்க கில்ட் நகைகள்
உத்தரவாதம். அசல் விலை ரூ. 10.
தற்போதைய குறைந்த விலை
செட் 1-க்கு ரூ. 5—12—0.

ஸ்திரீகளுக்கு உண்மையில் வசீகரமானவை. சாஸ்திரீக தயாரிப்பாயினும் உண்மைத் தங்கத்தைத் தோற்கடிக்கும். பரீட்சித்துப் பயனடையுங்கள். நகைகளாவன: (1) நெக்லஸ் செயின் (2) இரு ஜதை வளையல் (3) லோலக் ஒரு ஜதை (4) ஒரு புருச் (5) ரேடியோ கட்டிங் மோதிரம். ரூ. 2 முன் பணம் அனுப்புவோருக்குக் குழந்தைகளுக்கான மைனர் கழுத்துச்சங்கிலி ஒன்று அனுப்பப்படும். வி. பி. சார்ஜ் தனி. ஆர்டர் செய்க.
அமேஜான் டிரேடிங் கம்பெனி,
1/6, சாம்பய்யர் தெரு,
சௌகார்பேட்டை, ஜி. டி. மதராஸ்.


அற்புத வீடு: சாதாரண மனிதர்கள் இரண்டுபேர்களாகச் சேர்ந்து இரண்டு மூன்று நாளைக்குள் கட்டி முடிக்கக்கூடிய ஒரு வீடு இது. இதைக் கண்டுபிடித்தவர் லண்டனிலுள்ள ஒரு சிற்பி.

ஸ்ரீ அம்பாள் சேமியா உபயோகியுங்கள்
138. கொத்தவால் சாவடி. மதராஸ்.

ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் ஏஜண்டுகள் :—
ஸீதாராமா
ஜெனரல் ஸ்டோர்ஸ்,
பர்ஹாம்பூர்—செகந்திராபாத்
பெஜவாடா — மதுரை.

அமெரிக்காவில் இந்தியாவின் தூதராகச் சென்றிருக்கும் ஜனாப் அஸப் அலி அமெரிக்காவில் எண்ணற்ற அலுவல்களைக் கவனித்து இந்தியாவுக்குக் கவுரவத்தை உயர்த்திக்கொண்டிருக்கும் செய்திகள் பல சமீபமாக வெளியாகி யிருக்கின்றன; சென்ற 4-ந்தேதியன்று அவர் ஐக்கிய நாடுகள் சபையின் அவசரக் கூட்டத்தில் பாலஸ்தீனப் பிரச்னைபற்றிப் பேசினார். அவர் பேசும்போது எடுத்த படம்.

ஸ்ரீமத் பகவத் கீதை
விலை ரூ. 2—8—0
(தபால் செலவு பிரத்யேகம்)

நேதாஜி : ஜோதி வெளியீடு
விலை ரூபா 3.
தபால்செலவு பிரத்யேகம்

மானேஜர், "சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.

ருக்மணி சாம்பார்
&
ரஸம் பொடி

நவீன முறையில்
கைபடாமல் தயார்
செய்யப்பட்டது.

★

பிரதான நகரங்களில்
ஏஜண்டுகள் தேவை

விவரங்களுக்கு :—

தேவராஜ் & கோ.,
வைசியாள் வீதி,
கோயமுத்தூர்.

ருதுகத்தை நிறுத்தியது

குளிகை (Tablets) ருதுகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்தவல்லது. நிலையில்லா விக்காமல் கஷ்டம் நிவர்த்தியாகிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். விலை ரூ. 3. நாளபட்ட கோளாறுகளுக்கு விலை ரூ 5. மிகக் கடுமையான கோளாறுகளுக்கு ரூ 8. கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets) 6 மாத உபயோகத்திற்கு விலை ரூ 4. (வி. பி. க்கு 12 அணா அதிகப்படி.)

Mrs. P. DEVEE, F. D. S. (S. W)
Tollygunge :: CALCUTTA

ஸ்டாகிஸ்டுகள்: 1, ஹாரி & ஸன், 93, சைனாபஜார், மதராஸ், 2. ராகவன் & கோ. ஸ்ரீ நரஸிம்மராஜா ரோட், பெங்களூர் ஸிடி. 3. K. C. மாத்யு & கோ, கொழிஞ்சேரி, திருவாங்கூர், 4. J. திராத் & கோ, மகாத்மாகாந்தி ரோட், கராச்சி. 5. L. M. முகர்ஜி & ஸன்ஸ் லிட், 167, தாம்டோலா தெரு, கல்கத்தா. 6, விவேகானந்த நிக்தர் மொகல் ஸ்டால் 92, வீ தெரு, கொழும்பு. 708, லோயர் தெரு, பாடுல்லா (ஸிலோன்)

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.



காமினியா
ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி, கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில், ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டிஸ்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid P. O. Box 2088, Bombay 3.

அனைவருக்கும்
திருப்தி
யளிக்கக்கூடிய
எல்லாவிதமான

நவீன
பட்டு & நூல்
ஜவுளி
ரகங்களுக்கு

மாருதி கிளாத்மார்ட்
ராஜவீதி ★ கோயமுத்தூர்

மாதவிடாய் நின்று விட்டதா? எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சுலபமாகவும் ஹானியின்றியும் 24-மணியில் வெளிப்படுத்தும். "சம்பகிரோசனி" உத்தரவாதமானது. 30 வருஷம் புகழ்பெற்றது. கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர்ட் விலை ரூ. 2—12—0 தபாற் செலவு அணா 12.

கர்ப்பத்தடை நீங்கள் விரும்பிய விதம் கர்ப்பத்தடை செய்ய "தம்பதி சாகர" சிறந்த மருந்து. ஹானியற்றது. நிரந்தரம் ரூ. 4—4—0 தாற்காலிகம் ரூ. 1—8—0 தபாற் செலவு அணா 12 தனி.

ஆண்மை "மதன் விலாஸ் ரஸாயன்" அற்புத மருந்து வீர்யமின்மை நரம்புத் தளர்ச்சி, பசியின்மை இல் வாயு, இருமல் முதலியவை ஒரே வாரத்தில் குணமாகும். வாழ்க்கையை நன்கு அனுபவிக்கலாம். ரூ. 2—8—0 தபாற் செலவு அணா 12.

Kaviraj M. Kavyatirtha (S. W)
70, Cornwallis Street, Calcutta 6.
Stockist: Milton & Miller, 157, Broadway, Madras.

வைத்திய ரத்ன
யு. ராமநாத சாஸ்திரியாரின்
ஆனந்த பற்பொடி (Reg)

சரீரத்துக்கு வாசப்படியான வாய், பற்கள் இவைகளில் ஒளிந்து கொண்டிருக்கும் பயங்கரமான பற்பல விஷக் கிருமிகளை நாசம் செய்வதுடன், பற்களின் வேர்களைப் பலப்படுத்தி ஒழுங்காயும், அழகாயும் ரக்ஷிப்பதில் இது ஒன்றுதான் சிறந்தது.

இந்தியா கவர்ன்மெண்டு ஏஜண்டு ஜனரல், தென் ஆப்ரிக்கா; இந்தியா கவுன்ஸில் மெம்பர்கள், இங்கிலாந்து; இம்பீரியல் கவுன்ஸில் மெம்பர்கள் டில்லி; எக்ஸிக்யூடிவ் கவுன்ஸில் மெம்பர்கள், சென்னை; மதராஸ், பர்மா சீப் ஜட்ஜு உள்பட பத்து ஹைகோர்ட்டு ஜட்ஜுகள், சென்னை பிரதம மந்திரி உள்பட இதர மந்திரிகள், மஹாராஜாக்கள் இவர்களால் ஸர்டிபிகேட் செய்யப்பட்டு இருக்கிறது. இத்துடன் நாங்கள் ஜெயம்பெற்ற சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜுமென்டில் பின்கண்டபடி எழுதப்பட்டிருக்கிறது ;— "மார்க்கெட்டில் விற்கப்படும் இந்தியன் பற்பொடிகளுக்குள் ஆனந்த பற்பொடி ஒன்றுதான் அதிகமாய் எங்கும் நன்றாய் பிரஸித்தி பெற்றது என்பதற்குக் கொஞ்சங்கூட சந்தேகமே இல்லை. எங்கும் கிடைக்கும்:

மாதவிடாய்

நின்றுவிட்டால் எக்காரணத்தினால் ஆனாலும் நிருபிரயர்தினி கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட் ஒரே நாளில் ஹானியில்லாமல் வெளிப்படுத்தும். ரூ. 3. பர்பதி கர்ப்பத் தடைக்குச் சிறந்தது. தாற்காலிகம் ரூ. 2. நிரந்தரம் ரூ. 4-8-0. வி. பி. அணா 13.

இம்மருந்துகள் கிடைக்குமிடம்:—

அப்பா & கம்பெனி
286, சைனாபஜார், மதராஸ்.

★

விரை வீக்கம்

ஹர்னியா, யானைக்கால், முடக்கு வாதம் முதலியவற்றை எளிதில் குணமாக்குவது பிஷிஹா தைலம். தடிப்பு, வலி, வீக்கம், விரைவில் மாயமாய் மறையும் ரூ. 3. உள் மருந்து ரூ. 2. வி. பி. அணா 13.

KAVIRAJ
R. N. CHAKRAVORTY (S W.)
BHOWANIPORE. CALCUTTA 25.

கண்ணில் பூவிழுதல்

டிகான்ஸ் ஐப்யூர் (ரிஜிஸ்) ஒரு உத்தரவாதமான நிவாரணி. கண் வியாதிகள் எதற்கும் சிறந்தது. அபாயமற்றது. 1000-க் கணக்கான பேர் ஆபரேஷனில்லாமல் சொஸ்தமாயுள்ளனர். உலகப் பிரசித்தி பெற்றது. வெற்றிக்கு உத்தரவாதம். விவரம் இலவசம். விலை ரூ. 3. தபால் செலவு அணா 12.

செவிடு

முழுச்செவிடு அல்லது அரைச் செவிடு, காதில் இரைச்சல், மற்றும் எக்காரணத்தினாலும் எவ்வித நோயானாலும் நாலே வாரத்தில் சொஸ்தப்படுத்துவதற்கு உத்தரவாதம். ஹானியற்றதும் உடனே பலனளிப்பதுமான மருந்து. பிரசித்தி பெற்ற மூலிகை மருந்து. விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

குஷ்டம், வெண்குஷ்டம்

நீராத நோயும் தீரும். உடம்பு முழுவதுமோ அல்லது பாகத்தில் மட்டுமோ இருந்தாலும் சரி, எமது பிரசித்திபெற்ற ஹானியற்ற மூலிகைகளினால் நாலே வாரத்தில் பூரண குணம் காண்பீர்கள். விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

KAMALA WORKS,
6, Panchpota, BENGAL.



★ ★ ★

ஸ்திரீகளின் ஆரோக்கியத்திற்கு

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

அருணா

கர்ப்பாசயரோக நிவாரணி

அருணா ஸ்திரீகளின் தேக சுகத்திற்கு அவசியமான சிறந்த டானிக்-முறைப்படி தவருமல் உபயோகித்தால் ஆரோக்கியத்தை விருத்தி செய்து வாழ்க்கையை நன்கு ரஸிக்கச் செய்யும்.

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்.
தி-நகர் . . . . மதராஸ்.

EASTERNS 376

★ ★ ★

மீண்டும் யௌவனம்

வாழ்க்கையின் சிகரத்தில் இருக்கலாம்

ஒவ்வொருவருக்கும் முதுமை பருவமுண்டு. சிலருக்கு 30 அல்லது 40 வயதிலேயே இளம் பருவத் தவறுகளின் முதுமை அனுபவிக்கின்றனர். ஆண், பெண் இரு பாலரும முதுமையை ஒழித்து வாழ்க்கையை நன்கு அனுபவிப்பதற்கு சாஸ்திரீக முறையில் சிகிச்சை செய்ய வல்ல நிபுணர் இருக்கிருர். அவரிடம் உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் ஆலோசிக்கலாம். வீர்யமின்மை, பௌருஷமின்மை, நரம்புத்தளர்ச்சி, வெள்ளை, வெட்டை, வெண்குஷ்டம், மாதவிடாய்க் கோளாறுகள் எல்லாம் நிவர்த்திக்கப்படும்.

ஸ்திரீகளுக்கு (கோஷா) பிரத்தியேக வசதிகள்.

குறிப்பு: சிகிச்சைக்கு உத்தரவாதம் உண்டு. ரகசியமாய் வைத்துக்கொள்ளப்படும்.

ஆலோசனை நேரம்:
காலை 8-12 வரை; மாலை 4-8 வரை. ஞாயிறுகளில் காலை 8-12 வரை மட்டும்.

டாக்டர் நாரு

(செக்ஸாலஜிஸ்ட்)

நாரு ஆஸ்பத்திரி,
24, பிராட்வே, மதராஸ்.

பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவும்

தி கிராமபோன் கம்பெனி லிமிடெட்

டம் - டம் — பம்பாய் — மதராஸ் — டில்லி — லாகூர்.

Printed and published by S. Chakrapani Iyengar, at the Swadesamitran Power Press, 3 & 4 Whites Road, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan B. A.

1946

'உங்கள் மனிதர்' [illegible]

வெளுத்ததெல்லாம் பாலல்ல, கறுத்ததெல்லாம் நீரல்ல. அதைப்போல கையில் கண்ணாடியும் சாவணமும் வைத்திருப்பவர்கள் எல்லோரும் வைரப்பரீட்சை நிபுணர்கள் இல்லை. உங்கள் சந்தேக கற்பனைக்காக இவர்கள் வைரப் பரீட்சை சம்பந்தமான இரண்டொரு வார்த்தைகள் அரையும் குறையுமாகக் கற்று வைத்திருப்பார்கள்.

உங்களுக்கு நல்ல வைரம் கிடைக்கிறதா என்பதைப்பற்றி இந்த நிபுணர்களுக்கு கவலையில்லை. தங்களுக்கு எங்கே அதிகக் கமிஷன் கிடைக்கிறது என்பதுதான் இவர்களின் நோக்கம்.

[illegible]

உங்களிடம் அக்கறை கொண்டுள்ளனர். உங்களுடைய நன்மதிப்பைப் பெற எல்லா வழிகளிலும் முயற்சி செய்கின்றனர். ஏனெனில் உங்களெல்லோருடைய நன்மதிப்பே இவர்களின் சக்தி.

[illegible]

நீங்கள் இக்கீர்த்தி வாய்ந்த வியாபாரிகளிடத்தில் நேரிடையிலேயே வியாபாரம் செய்யுங்கள். உங்களுக்கு நம்பிக்கையான பொருள் லாபகரத்துடன் கிடைக்கும்.

இவற்றைக் கையாளுகிறவர்கள்

எல்லாரும் [illegible] !



ஸ்தாபிதம் : 1895

313, எஸ்பிளனேட், சென்னை.